


# ராஜேஷ்குமார்

நம்பர் முப்பத்திரண்டு, அழகேசன் ரோடு, தீபா காலனிதான் என்னுடைய வீட்டு முகவரி. வீட்டில் நான் தங்குகிற நேரம் சொற்ப மணி நேரம்தான். சாப்பிட, குளிக்க, தூங்க - இந்த மூன்று முக்கியமான காரியங்களுக்காகத்தான் வீட்டுக்குப் போவேன். வீட்டுக்காரரின் முறைப்பையோ, அம்மாவின் முணுமுணுப்பையோ... 'ஏண்ணா இப்படியெல்லாம் நடந்துக்கிறே?' என்று இரகசியமாக கண்டிக்கும் தங்கை கவுசல்யாவையோ லட்சியம் பண்ணாமல் - என்னுடைய காரியங்களை முடித்துக் கொண்டு - தெரு முனையில் இருக்கும் 'காபி - பார்'க்கு வந்து கடைக்கு முன்னால் போடப்பட்டிருக்கும் பலா மர பெஞ்சில் உட்கார்ந்து - சிகரெட் வாசனை அடிக்கும் என் நண்பர்களோடு உட்கார்ந்து 'நாள்' முழுக்க 'கலர்' பார்ப்பேன்.

என்னைப் பற்றி வர்ணிக்கட்டுமா? என் சமீபத்திய ஹேர்ஸ்டைல் ஜாக்கிஜானின் நார்முடி கிராப் (சலூன் புளூ மவுண்ட்டனில் என் கணக்கில்

பற்று ரூபாய் இருபத்தைந்து) அதற்கு முன்னால் கொஞ்ச நாள் டிஸ்கோ கிராப் வைத்திருந்தேன். கொஞ்ச நாள் ராஜேந்தர் மாதிரி தாடி விட்டுப் பார்த்தேன். நிர்மலா காலேஜில் படிக்கும் பி.எஸ்.சி. பாட்டனி கோகிலா தன் தோழிகளிடம் என்னைக் காட்டி, 'பாரடி... சிம்பன்சி ஒண்ணு மிருகக் காட்சி சாலையிலிருந்து தப்பிச்சுட்டு வந்திருக்கு!' என்று கேலி செய்யவே - அன்று மத்தியானம் தாடியை மழித்தேன். என் நிறம் மாநிறம். பவுடர் போட்டுக் கொண்டால் சிவப்பாய் - ஒரு மணி நேரத்துக்கு தோற்றம் காட்டுவேன். மண்ணாங்கட்டி நிற ஜீன்சும், காபி நிற சர்ட்டும் என் உடம்புக்கு அமர்க்களமாய் இருப்பதாக என் நண்பன் சோமு சொல்வான். காபி பார், வெட்டி அரட்டை, கலர் பார்த்தல் - என்று சொன்னதுமே என்னை யார் என்று யூகம் செய்திருப்பீர்களே!

உங்கள் யூகம் சரிதான்.

வேலையில்லாமல் திண்டாடுகிற பட்டதாரி நான்.

பெயர்...?

ஜெயகிருஷ்ணன். 'அக்னிதாசன்' என்று புனை பெயர் வைத்துக் கொண்டு - சில நாட்கள் கவிதை எழுதிப் பார்த்தேன். நண்பர்கள் என்னை அடிக்க வரவே - கவிதைக்கு முழுக்கு போட்டேன். 'ராஜேஷ்குமார் மாதிரி கிரைம் கதை எழுதலாமா?' என்று யோசித்தேன். என்னால் அவர் பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே என்பதற்காக - அந்த யோசனையையும் கைவிட்டேன்.

என் குடும்பத்தைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். நான் வீட்டுக்கு ஒரே பையன்தான் (நல்ல வேளையாக). அம்மாவும் அப்பாவும் என்னோடு நிறுத்தியிருந்தால் ரொம்பவும் தேவலைதான். ஆனால், அந்தக் காலத்தில்தான் 'இரண்டே பெறுக... இனிதே வாழ்க...' கோஷமாயிற்றே! அரசாங்கத்தின் அன்பான ஆணைக்கு கட்டுப்பட்டு - (இல்லாத) ஆஸ்திக்காக என்னையும் - (வேண்டாத) ஆசைக்காக என்னுடைய தங்கை கவுசல்யாவையும் - இந்தியாவின் மக்கள் தொகையில் சேர்த்துவிட்டார்கள்.

அம்மா இப்போது துடைத்த நெற்றியும் வெள்ளை சேலையுமாய் படுக்கையை விட்டு எழ முடியாமல் க்கிறாள்.



என்னுடைய அப்பாவுக்கு எப்போது 'அமரர்' பதவி கிடைத்தது என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறீர்கள். அப்படித்தானே...? அதையும் சொல்லிவிடுகிறேன்.

நான் கல்லூரி இறுதியாண்டு தேர்வில் கடைசித் தாள் எழுதி முடித்து பரீட்சை ஹாலை விட்டு வெளியே வந்த ஒரு எமகண்ட யோகத்தில் - என் உறவுக்கார பையன் ஒருவன் - காலேஜ் லெக்சரர் தமயந்தியைக் கெட்ட பார்வை பார்த்தபடி - எனக்காக காத்திருந்தான்.

''என்னடா?'' என்று தோளைத் தட்டினேன்.

அவன் தமயந்தியை விட்டு விட்டு என்னைப் பார்த்தான். ''அண்ணே! உங்கப்பாவுக்கு உடம்பு ரொம்பவும் முடியலை. தகவல் சொல்லி கூட்டிட்டு போகத்தான் வந்தேன். வெளியே ஆட்டோ நிக்குது. சீக்கிரம் வாங்க. பரீட்சை எழுதிட்டிருக்கும்போது விபரத்தைச் சொன்னால், உங்களாலே பரீட்சையை சரியா எழுத முடியாதுன்னு நினைச்சுத்தான் நீங்க வர்ற வரைக்கும் காத்திட்டிருந்தேன்!''

நான் ஆட்டோவில் பதறிக் கொண்டே ஏறி - வீடு வந்து சேர்ந்தபோது - வாசலில் சின்னதாய் உறவுக் கூட்டம். நடுவீட்டில் அப்பாவை நீளமாய் படுக்க வைத்திருந்தார்கள். கழுத்தில் கனமான ரோஜா மாலை. நெற்றியில் விபூதி குங்குமம். தலைமாட்டில் ஒரு தீபத்தின் சுடர் சோகமாய் அசைந்தது. நான் பெரிதாக அழுவேன் என்று எதிர்பார்த்து - ஆறுதல் சொல்லக் காத்திருந்த என் சொந்தக்காரர்கள் ஏமாந்து போனார்கள். எனக்கு ஏனோ அழுகை வரவில்லை. அப்பாவையே வெறித்து பார்த்தபடி - மூக்கை சிந்திக் கொண்டிருந்த அம்மாவுக்கு பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டேன். அம்மா என்னை கட்டிப்பிடித்துக் கொண்டு - 'டே... ஜெய கிருஷ்ணா! இனிமே எனக்கும் உன் தங்கச்சிக்கும் எல்லாமே நீதாண்டா... உங்கப்பா நம்பளையெல்லாம் இப்படி விட்டுட்டு போவார்ன்னு... கொஞ்சம்கூட நினைச்சே பார்க்கலைடா...' என்று அழுதாள். என் மனம் திக்கென்றது. அம்மாவையும் கவுசல்யாவையும் பயமாய் பார்த்தேன். எல்லா பொறுப்புகளையும் என் தோள்மேல் சுமத்திவிட்டு - ரோஜா மாலையும் கழுத்துமாய் - செத்துக்கிடக்கும் அப்பா மேல் எனக்கு கோபம் வந்த

அவர் ஏதாவது ஒரு கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாலாவது - வாரிசு அடிப்படையில் எனக்கு ஒரு வேலை கிடைத்திருக்கும். இவர் மெஷின் ஷாப் வைத்து லேத்தையும் வெல்டிங் மெஷினையும் நம்பி - நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தார். கண்ணுக்கெட்டின தூரம் வரைக்கும் கடன்கள். அப்பாவை அடக்கம் பண்ணிவிட்டு வந்த மறுநாளே - கடன்காரர்கள் ஒரு சின்ன ஊர்வலம் மாதிரி வந்து... லேத்தையும் வெல்டிங் மெஷினையும் விற்று - கிடைத்ததை பங்கு போட்டுக் கொண்டு போனார்கள்.

'சரி ஜெயகிருஷ்ணா! உனக்கும் வேலை இல்லை... அம்மா வேற படுக்கையில் இருக்கிறதாகச் சொன்னாய்... குடும்பம் எப்படி நடக்குது?'ன்னு நீங்க கேட்கிற கேள்வி என் காதில விழாமே இல்லை சார். நல்லாவே விழுகுது! நீங்க கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல - என்னோட வாய் கூசுது, சார். என்னோட தங்கச்சி கவுசல்யா வேலைக்குப் போறா, சார். கட்பீஸ் துணிக் கடையில் சேல்ஸ் கேர்ள். மாசமானா முன்னூறு ரூபா சம்பளம். கிராமத்துல இருக்கிற என்னோட தாய் மாமன் - ஏதோ பெரிய மனசு பண்ணி - நாலு மூட்டை அரிசியும், நாலு மூட்டை பருப்பும் கொடுத்துடறார்.

காபி பாரில் உட்கார்ந்து - வெட்டி அரட்டை அடிக்கிற நேரத்தில் - நாலு கம்பெனி ஏறி இறங்கி - வேலை தேடக்கூடாதான்னு நீங்க யோசிக்கிற அதே யோசனை போன மாசம் வரைக்கும் நடைமுறையில் இருந்தது சார். இப்போ இல்லை. ஏன்னா... இந்த ஊர்ல இருக்கிற எல்லா கம்பெனி வாசல்களையும் பார்த்துட்டேன். மந்திரி பிள்ளைக்கு கவர்னரும், கவர்னர் பிள்ளைக்கு பிரதமரேயும் சிபாரிசு பண்ணினால் தான் வேலை கிடைக்கும் என்கிற நிலை இருக்கிற நம் நாட்டுல... லேத் பட்டறை வைச்சு செத்துப்போன குமாரசாமியோட பையனுக்கு எப்படி சார் வேலை கிடைக்கும்...? வீட்டுக்கு ஒரு மரம் நடுங்கன்னு தலைவர்களெல்லாம் சொல்றாங்க. அதுக்கு அவசியம் இல்லை சார். இந்தியாவில் இருக்கிற எல்லா குடும்பங்களிலேயும் ஒரு மரம் இருக்கு. அதுக்குப் பேரு வேலையில்லா பட்டதாரி மரம். ('மரம் மாதிரி வளர்ந்து என்னடா பிரயோசனம்?



ஒரு வேலையைத் தேடிக்க துப்பு கிடையாது!' என்று எத்தனையோ குடும்பங்களில் அப்பாக்கள் சொல்ற வார்த்தை இது.)

என் மனக் காயங்களுக்கு மருந்து போட்டுக் கொள்கிற ஒரே இடம் - எங்கள் தெரு முனையில் இருக்கும் 'கவிதா காபி பார்'. இப்போதும் நான் இங்கேதான் இருக்கிறேன்.

''மச்சி'' - சிகரெட்டை புகையாய் மாற்றி நுரையீரல்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்த சோமு, என் தோளைத் தட்டினான்.

''என்னடா?''

''உன்னோட ஆளு வருது...''

தெருவின் கோடிக்கு பார்வையைக் கொண்டு போனேன்.

சுவர்ணா!

சுவர்ணா பக்கத்தில் வருவதற்குள் அவளைப் பற்றி சொல்லி விடுகிறேன். சுவர்ணாவின் பெயருக்கு ஏற்ற மாதிரியே அவளுக்கு பொன் நிறம். கல்லூரியில் என்னோடு படித்தவள். ராமாயண தீபிகா மாதிரி அழகாயிருப்பாள். தெற்றுப் பல் தெரிய அவள் சிரிக்கும்போது - இந்த பூலோகமே எனக்கு பஞ்சுமிட்டாய் மாதிரி லேசாய் தெரியும். என் மேல் கொஞ்சம் பரிதாபம் காட்டுபவள். என் மேல் அவளுக்கு இருக்கும் பரிதாபம் காதலாய் மாறாதா என்று எனக்குள் ஒரு சபலம். 'அவள் உன்னைக் காதலிக்கிறாடா!' என்று சோமு சொன்னாலும், என் மனம் கல்லைக் கண்ட நாய் மாதிரி பதுங்கிக் கொண்டு 'இருக்குமோ?' என்கிற நப்பாசையில் எட்டிப் பார்க்கும்.

சுவர்ணா என்னை நெருங்கினாள்.

நான் கையிலிருந்த சிகரெட்டைக் கீழே போட்டு ஹவாய் செருப்பால் அதை துவம்சம் செய்தேன். அவளை புன்னகையோடு பார்த்தேன்.

''ஹலோ சுவர்ணா! கிளாஸ் முடிஞ்சுதா?''

''ம்.''

''உங்க டுடோரியல் சென்டரில் எனக்கு வேலை ஏதாவது கிடைக்குமா?''

சுவர்ணா சிரித்தாள். ''உங்களையெல்லாம் வேலைக்கு சேர்த்துகிட்டா மூணு மாசம் கூட ஒழுங்கா வேலை

பார்க்கமாட்டீங்க.''

''ஏன்...? ஏன்...?''

''அங்கே தர்ற சம்பளம் உன்னோட சிகரெட் செலவுக்குக்கூட காணாது.''

''என்னது, சிகரெட்டா? நான் குடிக்கிறேனா...? ஆண்டவனே! என்னடா சோதனை இது?''

''இதோ பார், ஜெய்! எனக்கு எல்லாமே தெரியும். சும்மா பாவ்லா காட்டாதே! ஒரு நாளைக்கு எத்தனை சிகரெட் பிடிப்பே?''

''சேச்சே! எனக்கு சிகரெட் வாசம்ன்னாலே ஆகாது. 'உவ்வே'ன்னு வாந்திபண்ணுவேன்.''

''அகில உலகப் பொய்! நீ சிகரெட் பிடிச்சிட்டிருந்ததை நான் பார்த்துட்டேன்.''

''கண்ணால் காண்பது பொய்ன்னு அவ்வையார் சொல்லியிருக்கார்.''

சுவர்ணா தோள்களை குலுக்கிக் கொண்டாள். ''ஜெய்! நீ என்னை ஏமாத்தறதா நினைச்சுக்கிட்டு உன்னையே ஏமாத்திக்கிறே! உன்னோட குடும்பம் இருக்கிற நிலைமைக்கு காசை புகையாக்கிறது உனக்கும் நல்லாயில்லை; உன்னோட உடம்புக்கும் நல்லதில்லை...''

''சாரி சுவர்ணா! இனிமே என் வாழ்க்கையில் சிகரெட்டுக்கு என்றைக்குமே இடம் கிடையாது.''

''நம்பலாமா?''

''லாம்...''

சுவர்ணா - நெருக்கமாய் கட்டிய மல்லிகைச் சரமாய் பல் வரிசை தெரிய சிரித்தாள்! 'ஆகா! இந்த சிரிப்பை பெரிய 'ப்ளோ-அப்'பா மாற்றி 'என்லார்ஜ் பண்ணி - சுவத்துல மாட்டிகிட்டு ஆயுள் பூராவும் பார்த்துட்டிருக்கலாமே!'

''ஜெய்...''

''ம்.''

''என்ன அப்படி பார்க்கிறே?''

''ஒண்ணுமில்லை.''

''சரி, ஒரு நிமிடம் அப்படி தனியா வர்றியா? உன் கூடக் கொஞ்சம் பேசணும்.''

''ஏதாவது இரகசியமா?''



''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது.''

''அப்படின்னா எங்க வீட்டுக்கே போயிடலாமா?''

''அதுவும் சரிதான். வா, போலாம்.''

என்னுடைய வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தோம். அம்மாவுக்கும் கவுசல்யாவுக்கும் சுவர்ணாவை எப்போதோ அறிமுகம் செய்தாயிற்று. இரண்டு வாரம் சேர்ந்தாற்போல் - சுவர்ணா வரவில்லையென்றால் அம்மாவே கேட்பாள். அந்த அளவுக்கு ஒரு ஒட்டுதல்.

''ஜெய்...''

நடந்துகொண்டே சுவர்ணா கூப்பிட்டாள்.

''ம்...''

''இன்றைக்கு காலையில பேப்பர் பார்த்தியா?''

''தினத்தந்திதானே? பார்த்தேன். பி.ஏ. பட்டதாரிகள் தேவைன்னு ஒரு விளம்பரம்.''

''அப்ளிகேஷன் போட்டியா?''

''போடலை.''

''ஏன்?''

''அப்ளிகேஷனை டைப் பண்ணித்தான் அனுப்பணுமாம். அது கூட பத்து ரூபாய் போஸ்டல் ஆர்டர் இணைச்சு அனுப்பணுமாம். இந்த ஜிகினா வேலைக்கெல்லாம் என்கிட்டே காசு ஏது? அப்படியே நண்பர்கள்கிட்டே கடன் வாங்கி அப்ளிகேஷனை அனுப்பி வைச்சாலும் அவன் வேலையைத் தூக்கி கொடுத்துடவா போறான்?''

சுவர்ணா கோபமாய் என்னைப் பார்த்தாள்.

''என்ன பார்க்கிறே?''

''உனக்கு கொஞ்சம் கூட பொறுப்பே கிடையாது ஜெய்! வேலை கிடைக்குதோ இல்லையோ... முயற்சி பண்ணிப் பார்க்க வேண்டாமா?''

''முயற்சி பண்ணிப் பண்ணி நான் சலிச்சுப் போயிட்டேன்.''

''சரி! உனக்கு அந்தக் கம்பெனியிலிருந்து இன்டர்வ்யூ கார்டு வரும். அசந்து போய் நிற்காமே அட்டெண்ட் பண்ணு.''

''எனக்கு இன்டர்வ்யூ கார்டு வருமா? நான்தான் அப்ளிகேஷனே போடலையே?''

''நான் போட்டிருக்கேன்.''

''என்னது... நீ போட்டிருக்கியா?''

''ஆமா! பத்து ரூபாய் போஸ்டல் ஆர்டர் விவகாரத்தைப் பார்த்ததுமே நீ 'அப்ளை' பண்ணியிருக்கமாட்டேன்னு புரிஞ்சுகிட்டேன். அதான் நானே உன்னோட கோழிக் கிறுக்கல் கையெழுத்தைப் போட்டு - தபால்ல அனுப்பிச்சுட்டேன்...''

நடந்து கொண்டிருந்த நான் சட்டென்று நின்று அவளைப் பார்த்தேன். கண்களுக்குள் நீர் 'சுர்'ரென்று சுரந்து கொண்டது. 'எனக்காக எவ்வளவு செய்கிறாள்? என் மேல் அக்கறை வைத்து - எனக்காக கவலைப்படுகிற ஒரே ஜீவன்! என் மேல் எதுக்காக இவ்வளவு பரிவு! இந்த பரிவுக்கு பெயர் பரிதாபமா? காதலா?

''என்ன ஜெய், பேச்சையே காணோம்?''

''நீ எனக்காக ரொம்பவும் சிரமம் எடுத்துக்கிறே!''

''அப்படியாவது உன் சிரமம் குறையட்டுமேன்னுதான்...''

''என்னோட சிரமங்கள் குறையும் என்கிற நம்பிக்கை எனக்கு இல்லை, சுவர்ணா. எதிர்காலத்தை நினைச்சாலே எனக்கு பயமாயிருக்கு. எந்தப் பக்கம் திரும்பினாலும் கறுப்பு வார்னிஸ் பேப்பர் ஒட்டின மாதிரி இருட்டு. எனக்கு இன்னும் வேலையே கிடைக்கலை. அதுக்குள்ளே அம்மா கவுசல்யாவோட கல்யாணத்தைப் பற்றி கவலைப்படறா...''

''பெத்தவளுக்கு அதுதானே பெரிய கவலை.''

''எனக்கு மட்டும் கவலை இல்லையா என்ன? வெறும் கையை வைச்சுக்கிட்டு முழம் போட முடியுமா?''

''ஜெய்! உங்க சொந்த கிராமத்துல அம்மா பேருக்கு ஏதோ நிலம் இருக்கிறதா சொன்னாயில்லே? அதையாவது வித்து... கவுசல்யாவுக்கு ஒரு காரியம் பண்ணக் கூடாது?''

''அந்த நிலத்து மேல ஒரு வழக்கு நடந்திட்டிருக்கு, சுவர்ணா! அந்த வழக்கு இந்த ஜென்மத்தில முடியாது.''

பேசிக்கொண்டே வந்ததில் - வீடு வேகமாய் வந்திருந்தது. அம்மாவின் இழுவை இருமல் - ஒரு ராஜ ஆலாபனை மாதிரி கேட்டது. இருவரும் உள்ளே நுழைந்தோம். அம்மா நிமிர்ந்து பார்த்து - சுவர்ணாவை பார்வையில் வாங்கியதும் மலர்ந்தாள்.



''வா சுவர்ணா.''

சுவர்ணா கட்டிலை நெருங்கி என் அம்மாவின் மெலிந்துபோன எலும்புக் கைகளை ஆதரவாய் பற்றிக் கொண்டாள்.

''எப்படீம்மா இருக்கீங்க?''

என் அம்மா உலை துருத்தி மாதிரி உஷ்ணமாய் பெருமூச்சுவிட்டாள். ''உடம்புக்கு என்னம்மா? எனக்கு நோயே மனசுலதான். இந்த வீட்டு கஷ்டமெல்லாம் போயிட்டா... எனக்கு உடம்பு குணமாயிடும்.''

''கஷ்டமெல்லாம் சீக்கிரமே தீர்ந்துடும்மா.''

நான் ஸ்கிரீன் மறைவுக்கு போய் - பேண்ட்க்கு விடுதலை கொடுத்துவிட்டு - லுங்கிக்குள் நுழைந்து கொண்டேன்.

அம்மா நீளமாய் இருமிவிட்டு மறுபடியும் தொடர்ந்தாள். ''இந்த பாவி புள்ளைக்கு ஒரு நல்ல வேலையும், கவுசல்யாவுக்கு ஒரு வரனும் கிடைச்சுட்டா... நான் நிம்மதியா... செத்து...''

நான் லுங்கியை முடிந்து கொண்டே ஸ்கிரீன் மறைவில் இருந்து கோபமாய் வெளிப்பட்டேன். ''ஏம்மா... வீட்டுக்கு யாராச்சும் ஒருத்தர் வந்தால் போதும்... உடனே நம்ம கஷ்ட புராணத்தைப் பாட ஆரம்பிச்சுட வேண்டியதுதானா? ஒரு இங்கிதம் வேண்டாம்...?''

சுவர்ணா என்னைக் கையமர்த்தினாள். ''ஜெய்! இந்த வீட்டுக்கு நான் விருந்தாளி இல்லை. அம்மா மன ஆறுதலுக்காகத்தான் அந்த சங்கடங்களை சொல்றாங்க.''

''அதுக்காக... எப்பப் பார்த்தாலும் சொல்லணுமா?''

''அம்மா சுவர்ணா...'' என் அம்மா கூப்பிட்டாள்.

''சொல்லுங்கம்மா.''

''கொஞ்சம் வெந்நீர் வேணும். வைச்சுத் தர்றியா?''

''இதோ, நிமிடத்துல தர்றேன்மா!'' சேலையை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டு உள்ளிருந்த சமையலறைக்குப் போனாள் சுவர்ணா. நானும் பின்னாடியே போனேன்.

''வந்ததும் வராததுமா உனக்கு அம்மா வேலை கொடுத்து விட்டாள்.''

''அதனாலென்ன, பரவாயில்லை. எனக்கு இந்த மாதிரியான சின்ன சின்ன உதவியெல்லாம் பண்றதுன்னா

ரொம்பவும் பிடிக்கும்.''

பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி - ஸ்டவ்வை பொருத்தி ஏற்றினாள். நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். சுவர்ணா திரும்பினாள்.

''ஜெய்!''

''ம்.''

''நான் உன்கிட்டே பேசணும்ன்னு சொன்னேன், இங்கேயே பேசலாமா?''

''ம்.''

''நான் இப்போ கேட்கப் போகிற கேள்விக்கு 'திக்' என்று விழிச்சுப் பார்க்காமே... திக்காமே... திணறாமே... 'பளிச்' என்று பதில் சொல்லணும்...''

''ம்.''

''கேட்கட்டுமா?''

'கேளு.''

''நீ என்னைக் காதலிக்கிறியா... ஜெய்?''

நான் 'விசுக்'கென்று நிமிர்ந்தேன். சுவர்ணா என் முகத்திற்கு மிக அருகாமையில் புன்னகைத்தாள்.

'' 'பளிச்' என்று பதில் சொல்லணும்.''




நான் திக்கினேன். திணறினேன். சுவர்ணா இன்னமும் என்னைப் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன, பதிலையே காணோம், ஜெய்?''

''நீ திடீர்னு இப்படி கேப்பேன்னு...''

''நினைச்சுப் பார்க்கலையா? இப்போ நினைச்சுப் பார்த்து சொல்லு. நீ என்னைக் காதலிக்கிறாயா?''

என் நெற்றி லேசாக வியர்ப்பது எனக்கே தெரிந்தது. சுவர்ணாவின் முகத்தை தயக்கமாய் ஏறிட்டேன்.

''ம்... சொல்லு.''

''என்ன சொல்றதுன்னே எனக்குத் தெரியலை...''

''எதுவாயிருந்தாலும் சொல்லு.''

''உன்னைக் காதலிக்கக்கூடிய தகுதி எனக்கு இல்லை, சுவர்ணா. முடவன் ஒலிம்பிக் போட்டியில் கலந்துக்க ஆசைப்படலாமா?''



''அப்போ... நீ என்னைக் காதலிக்கலை...?''

''ஆமா.''

''அப்படீன்னா நாளைக்கு என்னை பெண் பார்க்க வர்றதுக்கு சம்மதம் கொடுத்துடலாமா?''

''சு... சுவர்ணா...''

''ஆமா ஜெய்! அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நான் இன்னைக்கு பதில் சொல்லியாகணும். நீ என்ன சொல்றே?''

''சம்மதம்ன்னு சொல்லிடு.''

''ஜெய்...''

''சுவர்ணா... இந்த கலியுகத்துல காதல் பண்ண இரண்டு மனசு மட்டும் போதாது. பணமும் வேணும். நான் உன்னைக் காதலிக்கலாம்ன்னு நினைக்கிறது கூட பைத்தியக்காரத்தனம். மனசு ஆசைப்படற நேரங்களிலெல்லாம் அதை அதட்டி வைக்கிறதுதான் என்னோட வேலை. வீட்ல உனக்கு கல்யாணம் பண்ணி வைக்க ஆசைப்பட்டால், நீ தாராளமா பச்சைக் கொடி காட்டிடு.''

''ஜெய்! உன்னால சீக்கிரமா ஒரு வேலையைத் தேடிகிட்டு என்னை கல்யாணம் பண்ணிக்க முடியாதா?'' கண்களில் மின்னும் நீரோடு என்னை ஏறிட்டு பார்த்தபடி கேட்டாள் சுவர்ணா.

நான் கசப்பாய் சிரித்தேன்.

''ஏன் சிரிக்கிறே?''

''கானல் நீர்ல தூண்டிலைப் போட்டு மீன் பிடிக்கிறது எவ்வளவு சாத்தியமோ... அவ்வளவு சாத்தியம் எனக்கு வேலை கிடைக்கறதும்...''

''ஏன் இப்படி நம்பிக்கையில்லாமே பேசறே ஜெய்?''

''நான் தாகத்தோடு அலைகிற மேகம் மாதிரி...''

''ஆறு மாசம் உனக்காக காத்திட்டிருக்கட்டுமா?''

''ஆறு வருடம் காத்திட்டிருந்தாலும், உனக்கு இதே பதில்தான் சுவர்ணா. கவுசல்யாவோட கல்யாணத்தை முடிச்சுட்டுதானே நான் என்னோட கல்யாணத்தை நினைச்சு பார்க்க முடியும். அதுக்குள்ளே எனக்கு காதோரம் நரை வந்துடும். உனக்கு முன்னுச்சியில் தலை வெளுத்துடும். பேசாம அப்பா - அம்மா சொல்ற மாப்பிள்ளைக்கே தலையை நீட்டிடு. என்னையும்

என்னோட குடும்பத்தையும் - எப்பவாவது ஒருதடவை மனசுல நினைச்சுக்க. அது போதும்.''

''ஜெய்! உன்னோட முடிவு இதுதானா?''

''ஆமா. தீர்க்கமான முடிவு.''

நான் சொன்ன அதே விநாடி-ஸ்டவ்வில் வெந்நீர் கொதிக்க ஆரம்பித்தது- என் மனசைப் போலவே!




சரியாய் இருபது நாள் கழித்து கையில் அழைப்பிதழோடு வந்து நின்றாள் சுவர்ணா. நான் அப்போது என் பேண்ட்டின் கிழிசலை தைத்துக் கொண்டிருந்தேன். கவுசல்யா வேலைக்குப் போயிருந்தாள். அம்மா தூக்கமாத்திரையின் உதவியோடு தூங்கிக் கொண்டிருந்தாள்.

நான், ''வா, சுவர்ணா'' என்றேன்.

''அடுத்த வாரம் கல்யாணம்'' என்றாள் சுவர்ணா.

''சந்தோஷம்.''

''கற்பகம் கல்யாண மண்டபத்துல.''

''சரி.''

''அம்மா, கவுசல்யா, நீ மூணு பேரும் கண்டிப்பா கல்யாணத்துக்கு வரணும்.''

''வர்றோம்.''

''அம்மா தூங்குறாங்களா?''

''இப்பத்தான் மாத்திரை சாப்பிட்டு படுத்தாங்க.''

''சரி. எழுப்ப வேண்டாம். கல்யாணத்துக்கு நான் வந்து கூப்பிட்டதா சொல்லிடு ஜெய்.''

''ம்.''

''நான் வரட்டுமா?''

''காப்பி சாப்பிட்டு போகலாமே?''

''வேண்டாம். நான் வர்றேன்.''

சுவர்ணா சொல்லிவிட்டு - தலையைக் குனிந்தபடி - வேக வேகமாக - வாசற்படிகளில் இறங்கி - மறைந்தாள். என் கண்களுக்குள் உஷ்ணமான கண்ணீர் சுரந்தது - அந்த பளபளப்பான கல்யாண பத்திரிகையையே வெறித்து பார்த்தேன்.

அபூர்வ முத்து ஒன்று கைநழுவிப் போன பிரமை.



''டேய், ஜெயகிருஷ்ணா!''

அம்மா புரண்டு படுத்துக்கொண்டே கூப்பிட்டாள். நான் எழுந்தேன்.

''என்னம்மா?''

''யாரோ வந்த மாதிரி இருந்ததே!''

''சுவர்ணாதான் வந்தாள்.''

''எதுக்கு வந்தா?''

''அடுத்த வாரம் அவளுக்கு கல்யாணமாம். கூப்பிட வந்தாள்.''

''என்ன பையன்டா நீ...? என்னை எழுப்பியிருக்கக் கூடாது?''

''நீ நல்லா தூங்கிட்டிருந்தேம்மா.''

''சரி, என்றைக்கு கல்யாணம்?''

'அடுத்த வாரம் புதன்கிழமை.''

''நல்ல லட்சணமான குணமான பொண்ணு. மாப்பிள்ளை கொடுத்து வைச்சவள்...'' அம்மா அங்கலாய்த்துக் கொள்ள - நான் வீட்டில் இருக்கப் பிடிக்காமல் எழுந்தேன்.

''அம்மா... வெளியே போயிட்டு வர்றேன்.''

''எங்கடா போறே?''

''போஸ்ட் ஆபீஸ் வரைக்கும் போய் லெட்டர் பார்த்து விட்டு வர்றேன்-'' சொல்லிவிட்டு - சட்டையை மாட்டிக் கொண்டு - வாசலில் இறங்கினேன். காலை பதினோரு மணி சூரியன் என் முகத்தில் செல்லமாய் சுட்டான்.

நடந்தேன்.

காபிபார் மரப் பெஞ்சில் என் நண்பர்கள் விரலிடுக்குகளில் புகையும் சிகரெட்டுகளோடு ''ஹாய்'' சொன்னார்கள். தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

''மச்சி! சேதி கேள்விப்பட்டியா?''

''என்னம்மா?''

''சுவர்ணா நம்ம ஜெய்க்கு நெத்தியில் காதல் நாமம் சாத்திட்டாளாம்.''

''அப்படியா?''

''ஆமாம்டா. அடுத்த வாரம் கல்யாணம்.''

நான் அவர்களைப் பார்த்து புன்னகைத்தேன். ''ஏன்டா... சுவர்ணாவை நான் காதலிக்கிறதா என்றைக்காவது உங்ககிட்டே சொல்லியிருக்கேனா?''

சோமு விசிலடித்தான்.

''நீ சொல்லலைன்னா எங்களுக்குத் தெரியாதா...?''

''மடத்தனமா பேசாதேடா... நானும் அவளும் நண்பர்கள். அவ்வளவுதான்.''

''நம்பச் சொல்றியா...?''

''நீங்க நம்பினாலும் சரி... நம்பாமல் போனாலும் சரி... நானும் சுவர்ணாவும் வெறும் நண்பர்கள்தான்.''

''சும்மா... கதை விடாதே அப்பனே! அவளை நீ லவ் பண்ணலைன்னு என் தலையிலே அடிச்சு சத்தியம் பண்றியா?''

''அவசியமில்லை.''

''பார்த்தியா, நழுவறான்.''

நான் கோபமாய் நண்பர்களைப் பார்த்தேன். ''இனி எவனாவது சுவர்ணாவைப் பத்தி பேசினால் பேய் மாதிரி அறைஞ்சுடுவேன். நான் அவளைக் காதலிக்கிறேன்னு எதை வைச்சுடா சொல்றீங்க...? லெட்டர் பரிமாற்றம் பண்ணிகிட்டோமா...? நான் எங்கேயாவது அவளை தனியா தள்ளிக்கிட்டு போய் டாவு அடிச்சேனா...? அவள் வீட்டுப்பக்கம் போய் சுத்தினேனா? எதை வெச்சுடா சொல்றீங்க...? இந்த காபி பார்க்கு பால் சப்ளை பண்ற பொன்னம்மாகூட எங்கிட்டே பேசறா... ஜோக் அடிக்கிறா... அதுக்காக அவளும் என்னைக் காதலிக்கிறான்னு சொல்லிடுவீங்களா...? சுவர்ணா என்கூட படித்தவள். என்னோட கஷ்ட நிலைமையைப் புரிஞ்சுகிட்டு கொஞ்சம் இதமா பேசுவா... என் மேல அவளுக்கு பரிதாபம்தான் இருக்கு. காதல் இல்லை...''

சோமு உஷாரானான். மற்ற நண்பர்களிடம் கிசுகிசுப்பாய் சொன்னான். ''டேய்! ஜெய் ரொம்பவும் சூடா இருக்கான். வேறு பேச்சு பேசுவோம்.''

''சரி... அதை விடு மச்சி! ஏதாவது ஒரு படத்துக்கு காலைக் காட்சிக்கு போவோமா...?''

''சாரி... நான் வரலை...''

''டிக்கெட் நான் எடுக்கிறேன் மச்சி...''

''வேண்டாம்'' - என்று சொல்லி தலையாட்டிக் கொண்டிருக்கும்போது யாரோ என் முதுகைத் தொட்டார்கள்.

திரும்பிப் பார்த்தேன்.



எங்கள் பகுதி போஸ்ட்மேன் கிருஷ்ணன் நின்றிருந்தார்.

''தம்பி! உங்களுக்கு ஒரு லெட்டர்.''

நான் ஆர்வமாய் கை நீட்ட - ஒரு கவரை திணித்தார். நான் அந்தக் கவரை அங்கேயே கிழித்து - உள்ளேயிருந்த கடிதத்தை உருவி படிக்க ஆரம்பித்தேன்.

அன்புள்ள ஜே.கே.!

நான் பிரபுராம். எப்படியிருக்கே? நம்ம நண்பர்கள் எப்படியிருகாங்க...? இந்த கடிதத்தை படிச்சிட்டிருக்கிற நேரம் உனக்கு வேலை கிடைச்சிருக்கும்னு நம்பறேன். நம்ம நண்பர்களில் யார் யாருக்கு வேலை கிடைச்சிருக்கு. இங்கே பம்பாயில் நாளுக்கு நாள் பணத்துக்கு மதிப்பில்லாமே போகுது. ஒரு பூவன் வாழைப்பழம் ஒரு ரூபா... ஒரு தம்ளர் தண்ணி நாலணா. இந்தியா ஏழை நாடுன்னு எவன் சொன்னது? நான் வேலை பார்க்கிற லாரி கம்பெனி கொழுத்த லாபத்துல ஓடறதுனால... கைநிறைய சம்பளம் வாங்கறேன். கெட்ட காரியங்களுக்கு (கண்டுக்காதே!) பத்து சதவீதம் செலவு பண்றேன். இருபது சதம் பாங்கியில் போடறேன். மீதி என்னோட நியாயமான செலவுக்கு. அடுத்த மாசம் ஊர்ப் பக்கம் வ்ரலாம்ன்னு இருக்கேன். நம்ம நண்பர்களைக் கேட்டதா சொல்லவும்...

இப்படிக்கு
உன் அன்பான பிரபுராம்.

நான் கடிதத்தை மடித்தேன்.

''லெட்டர் யார்கிட்ட இருந்துடா...?''

''பிரபுராம் எழுதியிருக்கான்...''

''என்னவாம்...?''

சோமுவிடம் நான் கடிதத்தைக் கொடுத்தேன். அவன் படித்துப் பார்த்துவிட்டு 'உச்' கொட்டினான். ''அவனுக்கு எப்பப் பாரு... பம்பாய் பிரதாபம்தான்... நம்ம வயித்தெரிச்சலை கிளப்பறதுக்காகவே லெட்டர் எழுதுவான் போலிருக்கு. பூவன் பழம் ஒரு ரூபாயாம். ஒரு தம்ளர் தண்ணி நாலணாவாம்...''

நான் அவன் கையிலிருந்த லெட்டரைப் பறித்து - பேண்ட் பாக்கெட்டுக்குள் செருகிக் கொண்டு - நகர்ந்தேன்.

''டேய் ஜெய்! எங்கடா போறே...?''

''வர்றேன்... இரு...''

நான் விறுவிறுவென்று நடந்து - இரண்டு தெருக்கள் தள்ளியிருந்த தபால் ஆபீஸை நெருங்கினேன். கூட்டமில்லாத கவுண்டரில் ஒரு இன்லேண்ட் லெட்டரை வாங்கி-அங்கிருந்த 'லொட லொடா' டெஸ்கில் உட்கார்ந்து பால்பாயிண்ட் பேனாவை பிதுக்கிக் கொண்டு - எழுத ஆரம்பித்தேன்.

அன்புள்ள பிரபுராம்!

நான் நொந்துபோன ஜெயகிருஷ்ணன். என் பெயரில் தான் 'ஜெய்' இருக்கிறதே தவிர – வாழ்க்கையில் எனக்கு தோல்விதான். இந்தக் கடிதத்தை நீ படித்துக் கொண்டிருக்கும் வேளையிலும்கூட எனக்கு இன்னமும் வேலை கிடைக்கவில்லை. வீட்டில் நோயாளி அம்மா. கல்யாணத்திற்காகக் காத்திருக்கும் தங்கை. அவளுடைய சம்பாத்தியத்தில் சாப்பிட வேண்டிய கட்டாயம். இந்த கேவலமான நிலை என் விரோதிக்குக் கூட வரக்கூடாது. நான் பம்பாய் வந்தால் எனக்கு வேலை கிடைக்குமா...? உன் கம்பெனி முதலாளியிடம் சொல்லி – உன் லாரி குடோனில் குப்பை அள்ளிக் கொட்டுகிற வேலையாவது வாங்கிக் கொடு. உன்னைக் கோயில் கட்டி கும்பிடுகிறேன். உன் பதிலை ஆவலாய் எதிர் பார்க்கும்–

நண்பன்

ஜெயகிருஷ்ணன்.

கண்களில் நீர் சுறுசுறுவென்று சுரக்க - கடிதத்தை எழுதி - அந்த இன்லேண்ட் லெட்டரின் வாயை - கண்ணீரைத் தொட்டு - ஒட்டி - தபால் பெட்டியின் வாய்க்குள் போட்டேன்.

'சுவர்ணாவின் கல்யாணம் நடப்பதற்குள் - பிரபுராமிடமிருந்து லெட்டர் வந்து பம்பாய் போய்விட வேண்டும்.'

யோசனையோடு நடந்து வீட்டுக்கு வந்தேன். அம்மா எழுந்து உட்கார்ந்து - தண்டவாளத் துண்டில் கல்பட்ட மாதிரி - 'கணீர் கணீர்' என்று இருமிக் கொண்டிருந்தாள். சமையலறைக்குள் சத்தம் கேட்டது.

நான் ஆச்சரியப்பட்டேன்.

''சமையலறைக்குள் யார்?''



அம்மாவிடம் கேட்டேன்.

''யாரம்மா... உள்ளே...?''

இருமுவதை நிறுத்தி அம்மா சொன்னாள்: ''கவுசல்யாடா...''

''கவுசல்யாவா...? கடைக்குப் போகலை?''

''கடையிலிருந்து வந்துட்டா...''

''என்னவாம்...?''

''ஒண்ணும் சொல்லலை... 'உம்'ன்னு இருக்கா. காரணம் கேட்டு கேட்டு எனக்கு இருமலே வந்துடுச்சு...''

நான் உள்ளே போனேன். அடுப்பில் பாத்திரம் வைக்கப்பட்டு டிகாஷன் கொதித்துக் கொண்டிருக்க-கவுசல்யா ஸ்டூலில் உட்கார்ந்து மோவாயைத் தாங்கிக் கொண்டிருந்தாள். நான் அவளருகே போய் நின்றேன்.

''கவுசல்யா...''

அவள் என்னை ஏறிட்டுப் பார்க்காமல் 'உம்' என்றாள்.

''ஏன், வேலைக்கு போகலையா...?''

''போகலை...''

''ஏன்...?''

அவள் பதில் பேசாமல் மவுனம் சாதித்தாள்.

''கேட்டது காதுல விழலை?''

''தலைவலி. வந்துவிட்டேன்...''

''தலைவலியா...? காய்ச்சலே வந்தாலும் நீ வேலைக்குப் போகாமே இருக்க மாட்டியே...?''

''அண்ணா! என்னைக் கொஞ்ச நேரம் சும்மா விடு...''

''காரணம் சொல்றவரைக்கும் நான் போக மாட்டேன். உன்னோட முகமே இன்றைக்கு சரியில்லை. கண்ணெல்லாம் சிவந்திருக்கு. அழுதியா...?''

''நான் அழலை...''

''பொய் சொல்லாதே...''

''பொய்ன்னே வைச்சுக்க... போ...''

நான் அவளையே பார்த்தேன். ''கவுசல்யா! உன்னோட முகவாட்டத்துக்கு காரணம் என்னான்னு எனக்கு புரிஞ்சு போச்சு. சுவர்ணாவோட கல்யாணத்தைப் பத்தி நீ கேள்விப்பட்டிருப்பே... உன் மனசிலேயும் அந்த ஆசை, ஏக்கம் எல்லாம் வந்திருக்கும். இந்த கையாலாகாத அண்ணனை நினைச்சு பார்த்துட்டு...''

''அண்ணா! உன்னோட அர்த்தமில்லாத கற்பனையைக்

கொஞ்சம் நிறுத்தறியா...? நானொண்ணும் கல்யாணத்துக்கு ஆசைப்படவும் இல்லை. ஏங்கிக்கிட்டிருக்கவும் இல்லை... என்னோட கல்யாணத்தைக் காட்டிலும் உனக்கு வேலை கிடைக்கிறதுதான் முக்கியம்.''

''சரி... உனக்கு கல்யாண ஏக்கம் இல்லை - ஒத்துக்கிறேன். அப்படீன்னா உண்மையைச் சொல்லலைன்னா... நான் இன்றைக்கு பூராவும் சாப்பிடவே மாட்டேன்...''

''அ...ண்...ணா!''

''ம்... சொல்லு...''

''அண்ணா... வந்து... வந்து...''

''சொல்லும்மா...''

''நான் வேலை பார்க்கிற இடத்துல ஒரு பிரச்சினை.''

''பிரச்சினையா...?''

''உஷ்...! சத்தம் போட்டு பேசாதே! அம்மா காதுல விழப்போகுது.''

''சரி. சத்தம் போடலை. சொல்லு...''

கவுசல்யா தலையைக் குனிந்து கொண்டே சொன்னாள். ''கொஞ்ச நாளா... என்னோட கடை முதலாளி சரியில்லேண்ணா... ஜாடை மாடையா என்னென்னமோ பேசிட்டு வந்தான். நான் அதை பெரிசா பொருட்படுத்தாமே விட்டுட்டேன். இன்றைக்கு காலையில வேலைக்கு போனதும் - ஸ்டாக் எடுக்கணும்னு மேலே இருக்கிற ரெடிமேட் செக்‌ஷனுக்கு தனியா கூட்டிட்டு போனான். தொட்டு தொட்டு பேசினான்.''

என் முகம் சிவப்பது எனக்கே தெரிந்தது.

''ராஸ்கல்!''

''நீ ஆத்திரப்பட்டு அவன்கூட சண்டைக்கு போயிடாதேண்ணா! இருக்கிற இந்த வேலையும் போயிடும்...''

''அதுக்காக...?''

''பதட்டப்படாதேண்ணா...! நான் 'தலைவலி'ன்னு சொல்லி லீவு வாங்கிட்டு வந்திருக்கேன். நாளைக்கு காலையில் நானே போய் - அவன்கிட்டே பேசிப் பார்க்கிறேன்... 'நீ நினைக்கிற மாதிரி நானில்லை' என்று



சொல்லி அவனை திருத்தப் பார்க்கிறேன்.''

''வேண்டாம் கவுசல்யா! நீ இனிமே அவன்கிட்டே வேலைக்குப் போகாதே.''

''போகாமே...?''

''ஊர்ல அவன் ஒருத்தன்தானா துணிக்கடை வைச்சிருக்கான்? வேறகடையில வேலை கிடைக்காமலா போயிடும்...?''

''நம்ம அவசரத்துக்கு கிடைக்கணுமே...?''

கவுசல்யா சொல்லிக் கொண்டிருந்தபோதே - வாசற்படியருகே ஏதோ சத்தம் கேட்டது. 'சர்ர்ரக்... சார்ரக்' என்ற டயர் செருப்பு சத்தம்.

''அண்ணா! வீட்டுக்காரர் வர்றார் போலிருக்கு.''

சட்டென்று வெளியே போக முயன்ற என்னைத் தடுத்தாள். ''நீ போகாதேண்ணா! வாடகை பாக்கிக்காக அந்த ஆள் கண்டபடி பேசுவான். நான் போனால் எகிறமாட்டான்.''

நான் சமையலறைக்குள் பதுங்கிக் கொள்ள - கவுசல்யா வாசலுக்கு போனாள். வீட்டுக்காரர் உடையாரை வரவேற்றாள்.

''வாங்க...''

''என்னம்மா... இன்றைக்கு வேலைக்குப் போகலையா...?''

''உடம்பு கொஞ்சம் சரியில்லை...''

''காத்தால வேலைக்குப் போன மாதிரி இருந்தது!''

''போனதும் வந்துவிட்டேன்.''

''மகாராஜா உள்ளே இருக்காரா...?''

''அ... அண்ணனைத்தானே கேட்கறீங்க? அவர் வெளியே போயிட்டார்.''

''காபி பார்ல அவனைக் காணோமே...''

''லைப்ரரிக்கு போயிருப்பார்...''

''இதோ பாரம்மா. உங்க அண்ணன்கிட்டே போன மாசமே வேற வீடு பார்த்துக்கச் சொல்லியிருக்கேன். நீங்க கொடுக்க வேண்டிய மூணு மாச வாடகைப் பணத்தைக்கூட கொடுக்க வேண்டாம். வீட்டை மட்டும் காலி பண்ணிக் கொடுத்தால் போதும்...''

''திடீர்ன்னு காலி பண்ணச் சொன்னால்... நாங்க எங்கேன்னு போய் வீடு தேடுவோம்...''

''வீடு கிடைக்கலைன்னா என்ன...? ஏதாவது ஒரு புறம்போக்கு நிலத்துல குடிசைபோட்டுக்க வேண்டியது தான். குடிசைபோட்டுக்கவும் வக்கில்லைன்னா... நல்ல அகலமான ஒரு பிளாட்பாரத்துல போய் உட்கார்ந்துக்க வேண்டியதுதான்.''

என்னுள் இரத்தம் தகதகத்தது. அடக்கிக்கொண்டேன்.

கவுசல்யா கெஞ்சும் குரலில் சொல்லிக் கொண்டிருந்தாள். ''ஒரு ஆறுமாசம் டயம் கொடுங்க. அதுக்குள்ளே... நாங்க வேற வீடு பார்த்துக்கிறோம்.''

''ஆறு நாள் கூட தர மாட்டேன்.''

அம்மா ஏதோ இருமிக்கொண்டே பேச முயல - உடையார் சிரித்தார். ''இருமிக்கிட்டே பேசாதேம்மா. மூச்சு நின்னுட்டா... உன்னோட காரியங்களை செய்யறதுக்கு கூட - உன் மகன் என்கிட்டதான் பணம் கேட்பான்...''

''டேய்ய்...!''

ஆத்திரத்தை அடக்கமுடியாமல் - வீறிட்டுக்கொண்டு சமையல் அறையிலிருந்து வெளிப்பட்டு - வாசற்படியில் குடையும் கையுமாய் நின்றிருந்த உடையார் மேல் பாய்ந்தேன்.

''டே... ஜெயகிருஷ்ணா!'' அம்மா கத்த -

''அண்ணா!'' கவுசல்யா என்னைத் தடுக்க முயன்று தோற்க - நான் உடையாரின் இடுப்பில் உதைத்தேன்.

உடையாரும், குடையும் கிழக்கிலும் - மேற்கிலும் சிதற - நான் கத்தினேன். ''என்னடா சொன்னே கிழட்டு ராஸ்கல்? எங்கம்மாவோட காரியங்களுக்கு உன்கிட்டே நான் பணம் கேட்பேனா...? நீ முதல்ல உயிரோடு இருந்தாத்தானே... உங்கிட்டே நான் பணம் கேட்பேன்...''

மறுபடியும் உடையாரை நோக்கிப் பாய்ந்தேன்.

''அண்ணா! அவரை ஒன்னும் பண்ணாதே... விட்டுடு!'' கவுசல்யா நீளமாய் கத்த, நான் விடவில்லை.

குப்புற விழுந்து - முகத்தில் மண் பட்டிருந்த உடையாரை அள்ளி எடுத்து வேலிப்படலையை நோக்கி வீசினேன். வேலிப்படலையை நாசம் செய்து கொண்டே - என்றைக்கோ செத்துப் போன அம்மாவை உச்சரித்துக் கொண்டு - ரோட்டில் போய் விழுந்தார். மூக்கிலும் - வழுக்கையின் முன் மண்டையிலும் 'புளிச்'சென்றது



இரத்தம்.

கவுசல்யா ஓடி வந்து என் புஜத்தைப் பற்றினாள்.

''அண்ணா! வேண்டாண்ணா. உன்னோட அடிக்கு உடையார் தாங்கமாட்டார். ஏதாவது ஒன்னு ஆயிடப்போவுது...''

''மனசுல ஈரமே இல்லாத அந்த கிழக் கோட்டான் செத்து தொலையட்டுமே! அப்பா உயிரோடு இருந்த வரைக்கும், இந்த ஆளுக்கு எவ்வளவு உதவி பண்ணியிருப்பார்? அதையெல்லாம் கொஞ்சம்கூட நினைச்சே பார்க்காமே... நாக்குல நரகலைத் தடவிகிட்ட மாதிரி என்னென்ன பேசறான்? ஏன்டா... எங்கம்மா காரியத்துக்கு உன்கிட்டே பணம் கேட்பேனா...?''

அவிழ்ந்து போன வேட்டியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு - உடையார் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே ஓடினார்.

நான் மூச்சிரைக்க உள்ளே வந்தேன்.

அம்மா கோபப் பார்வை பார்த்தாள். ''நம்ம கால நிலைமை மோசமா இருக்கும்போது அவரை ஏன்டா அடிச்சே?''

''அவனை உயிரோடு விட்டதே தப்பு.''

''அண்ணா! நீ அவரைக் கை நீட்டினது தப்பு.''

''அவன் அப்படி பேசினது மாத்திரம் சரியா?''

''அவர் வீட்டுக்காரர். வாடகையை ஒழுங்கா தரலைன்னா, அப்படித்தான் பேசுவார்.''

''அதுக்காக என்ன வேணும்ன்னாலும் பேசிடறதா?''

இதே ரீதியான பேச்சில் பத்து நிமிடம் கரைந்திருந்த போது - வாசலில் ஏதோ ஒரு வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தேன்.

போலீஸ் ஜீப்.




**வா**சலில் வந்து நின்ற போலீஸ் ஜீப்பை பார்த்ததுமே - என் உடம்பின் சகல இயக்கங்களும் நின்றுபோன மாதிரி ஓர் உணர்வு. அம்மாவும் கவுசல்யாவும் பதற ஆரம்பித்தார்கள். கான்ஸ்டபிள் ஒருவர் ஜீப்பிலிருந்து இறங்கி வந்தார்.

''ஜெயகிருஷ்ணன் யாரு இங்கே?''

முன்னால் போனேன்.

''நான்தான் சார்.''

''வாடகை கேட்க வந்த உடையாரை அடிச்சியா?''

''சார்... அது... வந்து... அவர்... வந்து...''

''இந்தக் கதையெல்லாம் வேண்டாம். அவரை நீ அடிச்சு இரத்தக் காயம் ஏற்படுத்தினியா?''

''ஆ... ஆமா... சார்.''

''போய் ஜீப்புல ஏறு.''

''சார்... அவர் எங்கம்மாவை...''

''ஜீப்புல போய் ஏறுன்னு சொன்னேன். இனி ஏதாவது பேசினால் மரியாதை கெட்டுடும். உடையார் ஸ்டேஷனுக்கு வந்து நீ அவரைக் கொலை பண்ண முயற்சி பண்ணினதா புகார் பண்ணியிருக்கார்...''

''சார்... இங்கே என்ன நடந்ததுன்னா...''

''நீ எதைச் சொல்றதாயிருந்தாலும் ஸ்டேஷனுக்கு வந்து சொல்லு. இன்னும் இங்க நின்னுகிட்டு பேசிட்டிருந்தால், வீட்டில் இருக்கிற எல்லாரையும் ஜீப்புல ஏத்ற வேண்டியிருக்கும்.''

அம்மாவும், கவுசல்யாவும் ஸ்தம்பித்துப்போய் நிற்க-

நான் கான்ஸ்டபிளை பின்தொடர்ந்து போய் - ஜீப்பில் ஏறினேன். அம்மாவின் அழுகுரல் பின்னணி இசையாய் கேட்க - ஜீப் இரைச்சலோடு புறப்பட்டது.

ஸ்டேஷனுக்கு முன்னால் ஜீப் நின்றபோது - உடையார் தலையில் பேண்டேஜ் கட்டோடு இன்ஸ்பெக்டருக்கு எதிரே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் கைகாட்டி சத்தம் போட்டார்.

''இவன்தான் இன்ஸ்பெக்டர்.''

நான் இன்ஸ்பெக்டருக்கு முன்னால் போய் நின்று அவரை ஏறிட்டேன். மனசுக்குள் ஆச்சரியம் சுழன்றது.

இவன்... இவன்... என்னோடு படித்த சரவணன்! காக்கி யூனிபாரத்துக்குள் - கனமான உடம்போடும், முகத்தில் மீசை, குளிர்கண்ணாடியோடும் அமர்க்களம் காட்டுகிற அவனை இமை கொட்டாமல் பார்த்தேன். அவன் என்னை அடையாளம் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. லத்தியைக் கையில் உருட்டிக் கொண்டே கேட்டான்.

''உன் பேரென்ன?''



''ஜெயகிருஷ்ணன்.''

''இவரை நீ அடிச்சியா?''

''ஆமா.''

''எதுக்காக அடிச்சே?''

நான் காரணத்தைச் சொன்னேன். சரவணன் என் பேச்சை உன்னிப்பாய் கேட்டுவிட்டு உடையாரின் பக்கம் திரும்பினான்.

''இவனோட அம்மாவை நீங்க கேவலமா பேசனீங்களா?''

உடையார் எச்சில் விழுங்கினார். ''சும்மா... ஆத்திரத்துல... ஒரு பேச்சுக்கு சொன்ன வார்த்தை இன்ஸ்பெக்டர். அதைப் போய் இந்த வெறும்பயல் பெரிசா எடுத்துகிட்டு என்னையே கொலை பண்ண வந்துட்டான்...''

''ஆத்திரத்துல என்ன வேணும்னாலும் பேசுவீங்களா?''

உடையார் நெளிய - சரவணன் கடுமையான குரலில் தொடர்ந்தான். ''நீங்க வயசுல பெரியவங்க... உங்க வீட்டுல இருக்கிற பெண்களை வெளியே இழுத்து யாராவது மோசமா பேசினால் என்ன பண்ணுவீங்க?''

''இன்ஸ்பெக்டர்...''

''உங்க பேர்லேயும் தப்பு இருக்கு உடையார். அதுக்காக இவன் உங்களை அடிச்சது நியாயம்னு சொல்ல வரலை. நீங்களும் கொஞ்சம் நிதானமா பேசியிருக்கலாம். உங்களுக்கும் அவங்க குடும்பத்துக்கும் ரொம்ப காலமாவே பழக்கம் இருக்குன்னு விசாரணையில் சொன்னீங்க. இந்த புகாரெல்லாம் வேண்டாம். கேசை கோர்ட்டுக்கு கொண்டு போனால் பிரச்சினைகள் தீர்ந்துடாது. நீங்கள் விரும்பினால் இந்த பிரச்சினையை இப்பவே சுமுகமா தீர்த்து வைவக்கிறேன்...''

''நீங்க எது சொன்னாலும் சரிதான் இன்ஸ்பெக்டர்.''

சரவணன் என்னிடம் திரும்பினான். ''ஜெயகிருஷ்ணன்! அவர் விருப்பப்படி நீ வீட்டைக் காலி பண்ணிடறது நல்லது. தகராறு பண்ணிக்க வேண்டாம். வீட்டைக் காலி பண்ண உனக்கு எத்தனை மாசம் அவகாசம் வேணும்?''

''ஆறு மாசம்.''

''ஆறு மாசத்துக்குள்ளே காலி பண்ணிடுவியா?''

''பண்ணிடுவேன்.''

''சரி! உடையார்கிட்டே மன்னிப்பு கேட்டுக்க. வயசுல பெரியவர். அவரைக் கை நீட்டி அடிக்கலாமா?''

நான் தயங்கினேன்.

''ம்... கேளு. மன்னிப்புக் கேட்டால் ஒண்ணும் குறைஞ்சு போயிடமாட்டே.''

நான் உடையாரை ஏறிட்டுப் பார்த்து - மெல்லிய குரலில் சொன்னேன். ''ஏற்கனவே ரணமாகிப் போன என் மனசுல உங்கள் வார்த்தைகள் தீக்கட்டிகளா பட்டது- அதனால்தான் கோபத்தை அடக்க முடியாமே... கை நீட்டிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க.''

உடையார் என்னைப் பார்க்காமல் - சுவரைப் பார்த்தபடி 'ம்... ம்' என்று முறைப்பாய் சொன்னார். சரவணன் அவர் கொடுத்த புகாரை எடுத்து கிழித்துப் போட்டபடி, ''நீங்க புறப்படுங்க உடையாரே...! நான் இவனுக்கு கொஞ்சம் புத்தி சொல்லி அனுப்பறேன்...'' என்றான்.

''மனசுல உறைக்கிற மாதிரி- நெஞ்சுல நிலைச்சு நிக்கறமாதிரி புத்திசொல்லி அனுப்புங்க இன்ஸ்பெக்டர்!'' உடையார் சொல்லிவிட்டு புறப்பட்டு போனதும்- சரவணன் தொப்பியைக் கழற்றி மேசையின் மேல் வைத்து விட்டு, ''ஜெய்கிருஷ்ணா! என்னடா இதெல்லாம்?'' என்றான்.

''ச... சரவணன்...''

''ஒரு நோயாளி அம்மாவையும், கல்யாண வயசுல இருக்கிற ஒரு தங்கச்சியையும் வைச்சுகிட்டு இப்படி அடிதடி கேஸ்ல இறங்கலாமா? ஒருத்தருக்கு நீ இரத்தக் காயத்தை உண்டாக்கினால், நீ அவரைக் கொலை செய்ய முயற்சித்ததாக சட்டம் தன்னோட பார்வையில் பார்க்கும்...''

''தப்புதான்! நான் அவரை அடிச்சிருக்கக் கூடாது...''

''உட்கார்! டீ சாப்பிடலாம்.''

''வேண்டாம்.''

''உட்காருடா, போகலாம்! தொப்பியைக் கழட்டிட்டேன். இப்ப நான் உன்னோட காலேஜ் நண்பன். நீ ஃப்ரீயா பேசலாம்.''



நான் தயக்கமாய் உட்கார, சரவணன் தொடர்ந்தான். ''நான் இந்த ஸ்டேஷனுக்கு வந்து ஒரு வாரம் தான் ஆச்சு. ரெக்ரூட்மெண்ட் முடிஞ்சதுமே 'போஸ்டிங்' இங்கே போட்டுட்டாங்க! ஆமா, உனக்கு இன்னுமா வேலை கிடைக்கலை?''

''கிடைக்கலை''

''இரண்டு வருடமா என்னதான் பண்ணிட்டிருந்தே?''

''வெட்டி ஆபீசர்தான்.''

''எம்.எல்.ஏ., மந்திரின்னு யாரையாவது பிடிச்சு - கையில பணத்தை அழுத்தி - ஏதாவது ஒரு வேலையில ஒட்டிக்க வேண்டியதுதானே! என்னை எடுத்துக்க. டிகிரி முடிஞ்சதுமே, சப்-இன்ஸ்பெக்டர் போஸ்ட்டுக்கு அப்ளை பண்ணினேன். அப்பா ஒரு மாஜி மந்திரி மூலமாக இந்த உத்யோகத்தை எனக்கு வாங்கித் தந்தார்.''

நான் கசப்பாய் சிரித்தேன். ''உன்னோட சாமர்த்தியம் எனக்கு வராது சரவணன். அதுவுமில்லாமே ஒரு எம்.எல்.ஏ.வுக்கோ மந்திரிக்கோ லஞ்சம் கொடுக்கிற அளவுக்கு என்கிட்டே பணம் கிடையாது. அவ்வளவு பணம் என்கிட்டே இருந்தால் சொந்தத்துல நானே ஒரு தொழிலைத் தொடங்கிடுவேன்...''

கான்ஸ்டபிள் இரண்டு கண்ணாடி தம்ளர்களில் டீயைக் கொண்டு வந்து வைத்தார். சரவணன் ஒரு தம்ளரை எடுத்து நீட்டினான்.

''சாப்பிடு.''

நான் வாங்கிக்கொண்டு தம்ளரின் விளிம்பை உதட்டுக்குக் கொடுத்தேன். சரவணன் கேட்டான். ''சிஸ்டர் பேரு கவுசல்யாதானே?''

''ஆமா.''

''என்ன பண்ணுது?''

''ஒரு கட்பீஸ் கடைக்கு வேலைக்கு போயிட்டிருக்கா.''

''அம்மாவுக்கு என்ன உடம்பு?''

''முற்றின ஆஸ்துமா.''

''ஜெயகிருஷ்ணா! படிப்புல என்னைக் காட்டிலும் நீ கெட்டிக்காரன். ஆனா, உனக்கு வேலை கிடைக்கலை. எங்கப்பாவுக்கு அரசியல்ல இருக்கிற செல்வாக்கை

வைச்சு உனக்கு ஒரு வேலை வாங்கித்தர ஏற்பாடு பண்றேன்.''

''ரொம்ப நன்றி சரவணன்.''

டீயைக் குடித்துவிட்டு எழுந்தேன்.

''அப்பப்ப ஸ்டேஷனுக்கு வந்து போய்க்கிட்டிரு ஜெயகிருஷ்ணா - அதாவது என்னைப் பார்க்க...'' அவன் சிரித்தபடி சொல்ல - நானும் சிரித்துக் கொண்டே ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்தேன்.

பத்தடி நடந்ததும் ஆச்சரியப்பட்டேன்.

எதிரே-

சுவர்ணா வேகவேகமாய் வந்து கொண்டிருந்தாள். நான் நின்றேன். அவள் பதட்டமாய் கேட்டுக் கொண்டே என்னை நெருங்கினாள். ''ஜெய்! உன்னை போலீஸ்ல பிடிச்சுட்டு போயிட்டாங்களாமே...''

''யார் சொன்னாங்க...?''

''தெருவுல பேசிக்கிட்டாங்க...''

''ஜாமீன் கொடுக்கலாம்ன்னு வந்தியா?''

''ஆமா...''

''இதோ பார் சுவர்ணா! அடுத்த வாரம் நீ மணவறையில் உட்கார்ந்து ஒருத்தருக்கு வாழ்க்கைப்படப் போகிறள்! இனிமே என்னைப் பற்றியோ... என் குடும்பத்தைப் பற்றியோ கவலைப்படாதே...! எங்களுக்கு உதவப் போய் உன்னோட வாழ்க்கையை நாசம் பண்ணிக்காதே...''

''ஜெய்...!''

அவள் கூப்பிடக் கூப்பிட, நான் திரும்பிப் பார்க்காமல் வீட்டை நோக்கி விறுவிறுவென்று நடந்தேன்.




கடந்த ஒரு மாத காலமாய் 'நாய் அலைச்சல்' அலைந்தும் வேலை கிடைக்காமல் போகவே - பிரபுராம்க்கு ஒரு லெட்டர் எழுதிப் போட்டுவிட்டு பம்பாய் புறப்பட்டுவிட்டேன். முப்பத்தேழு மணிநேரம் கசங்கிய காகிதமாய் பிரயாணம் செய்து - பம்பாய் விக்டோரியா டெர்மினசில் ஒரு சின்ன டிரங்க் பெட்டியோடு போய் இறங்கினேன்.

ஸ்டேஷன் முழுவதும் கசகச கும்பல். அந்நியமொழி.



அந்நிய முகங்கள். ஏதோ ஒரு கோட்டையைப் பிடிக்கிற வேகத்தோடு - எல்லோருமே வேக வேகமாய் போய்க் கொண்டிருந்தார்கள். நான் ஓரமாய் நின்று - பிரபுராம் எங்கேயாவது தட்டுப்படுகிறானா என்று - பார்வையை நாலா பக்கமும் அனுப்பினேன்.

அவன் தட்டுப்படவில்லை.

கையில் சரியான அட்ரஸ் இருக்கிறது.

விசாரித்துக் கொண்டு போக வேண்டியதுதான்.

நடந்தேன்.

ஸ்டேஷன் பிரமாண்டமாய் இருந்தது. எல்லா பிளாட்பாரங்களிலும் மின்சார ரெயில்கள் எந்த நிமிடமும் புறப்பட்டு போகத் தயாராய் இருந்தன. பெண்கள் விதவிதமான ஆடைகளில் கண்களில் பட்டு மறைந்தார்கள். சேலை கட்டியிருந்த எல்லா பெண்களுமே தொப்புள்களைக் காட்டினார்கள். 'நெக் நெக்' - என்று தோள்பட்டைகளை இடித்துக் கொண்டு போகும் ஆண்களை அலட்சியம் செய்தார்கள். எந்தப் பக்கம் திரும்பினாலும் இந்தி விளம்பரங்கள்.

திகைப்போடு நடந்து கொண்டிருந்த என் தோளின் மேல் - மெத்தென்று ஒரு கை விழவும் திரும்பிப் பார்த்தேன்.

பிரபுராம்.

''சாரிடா! கொஞ்சம் அசந்து தூங்கிவிட்டேன். போதாக் குறைக்கு நான் வந்த பஸ் சிக்னல்ல மாட்டி...''

''பரவாயில்லே! முகவரிதான் கைவசம் இருக்கே! விசாரிச்சுகிட்டு வந்துர மாட்டேன்...?''

''ரொம்பவும் கஷ்டம். நீ இங்கே இங்கிலீஷ்ல கேள்வி கேட்டால் எவனுமே வாயைத் திறந்து பதிலைச் சொல்ல மாட்டான். இந்தியில் கேட்டாத்தான் பதில் சொல்லுவான்...''

''அப்படி வேற ஒரு பழக்கம் இருக்கா...?''

''போகப் போக... இங்கே இருக்கிற இந்தி வெறி உனக்கே தெரியும். எவனைப் பார்த்தாலும் 'ஹை ஹை'ன்னுதான் பேசுவான்.''

''இதையெல்லாம் பார்க்கும்போது காபி பார்ல வெட்டி அரட்டையும் கலரும் பார்த்திட்டிருந்த நேரத்துல இந்தி படிச்சிருக்கலாமேன்னு தோணுது...''

''இப்ப அப்படித்தான் தோணும். வா... முதல்ல வெளியேபோகலாம். எலக்ட்ரிக் டிரெயின் வர்ற நேரம். ஒவ்வொரு டிரெயினிலிருந்தும் கும்பல் கொட்டும்.''

மக்களின் மேல் தட்தட்டென்று மோதிக் கொண்டு படிகளில் சரிந்து வெளியே வந்தோம்.

அகலமான ரோட்டில் வாகனங்கள் இராணுவ ஒழுங்கோடு சாரி சாரியாய் போய்க் கொண்டிருந்தன. உடம்பை உறுத்தாத சுகமான வெய்யில். பாதசாரிகளுக்காக போட்டிருந்த வரிப்பட்டை கோடுகளில் - வேக வேகமாய் நடந்து - பிளாட்பாரத்தின் மறுபக்கத்தை தொட்டோம். பிளாட்பாரம் முழுக்க 'ஜே ஜே' வென்று ஆண்களும் பெண்களும் உரசிக் கொண்டு நின்றார்கள்.

''பிரபு...''

''உம்...''

''இங்கே என்ன இவ்வளவு கூட்டம்? ஏதாவது ஆர்ப்பாட்டமா? ஊர்வலமா?''

பிரபுராம் சிரித்தான். ''இதுதான் பஸ் ஸ்டாப். ஆபீஸ் போறதுக்காக மக்கள் காத்திட்டிருக்காங்க...''

எனக்குள் பிரமிப்பு ஓடியது. கூடவே ஒரு நம்பிக்கையும் பிறந்தது. 'இவ்வளவு பேர்க்கு வேலை வாய்ப்பு தந்திருக்கிற இந்த பெரிய நகரம் எனக்குன்னு ஒருவேலையை வாங்கிக் கொடுக்காதா... என்ன...?'

''என்னடா யோசனை...?''

நான் யோசித்ததை சொன்னதும் பிரபுராம் சிரித்தான். ''நிறைய பேர் நம்ம தமிழ்நாட்டிலிருந்து அப்படித்தான் வர்றாங்க. நாளாக நாளாக அவங்க வாங்கின பட்டத்தையே மறந்துட்டு - ஏதாவது ஒரு ஓட்டலுக்குப் போய் மேஜையைத் துடைக்க ஆரம்பிச்சுடறாங்க... உன்னோட அதிர்ஷ்டம் எப்படியிருக்குன்னு தெரியலை...''

''பாவி! ஏன்டா பயமுறுத்தறே? ஊர்ல கடன் வாங்கி ரெயிலேறி வந்திருக்கேன்...''

பம்பாய் நகர பஸ் ஏராளமான மக்களை அடைத்துக் கொண்டு புஷ்டியாய் வந்து நிறுத்தத்தில் நின்றதும் - பிரபுராம் கண்ணைக் காட்டினான்.

''நம்ம ப்ஸ் இதுதான்... உன்னால கும்பல்ல ஏற



முடியுமா?''

''தாராளமா.''

''சரி, தாவு...!''

தாவினோம்.

பஸ் நகர்ந்தது. இருபது நிமிட வியர்வைநெடிப் பயணம். பஸ் போய்க் கொண்டிருக்கும் போதே - வெற்றிலைச் சாறு எச்சிலை சன்னல் வழியே பயணிகள் துப்பினார்கள்.

நாங்கள் இறங்க வேண்டிய பஸ் நிறுத்தம் வந்ததும் இறங்கி - மூத்திர நாற்றம் குப்பென்று அடிக்கும் - ஒரு உலக மகா மோசமான சந்துக்குள் நுழைந்து நடந்தோம். நான் மூக்கை பொத்திக் கொள்ள பிரபுராம் சிரித்தான்.

''நாலஞ்சு தடவை இந்த சந்துல நடந்தா போதும்... உன் மூக்குக்கு இந்த மூத்திர நாற்றம் விசுவாசமா பழகிப் போயிடும்.''

''சே! வயித்தைக் குமட்டுது...''

சந்தின் இரண்டு பக்கமும் நெருக்கமாய் குடிசைகள். அம்மண உடம்போடு - அழுக்காய் அலையும் குழந்தைகள். சந்தின் குறுக்கே துர்நாற்றத்தோடு ஓடும் சாக்கடைகள். கார்ப்பரேஷன் குழாயடியில் - அரைகுறை ஆடைகளோடு குளிக்கும் பெண்கள்.

பிரபுராம் என் தோளைத் தட்டினான்.

''இது பம்பாயின் ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தை பார்த்தா குபேரபுரி மாதிரி இருக்கும்.''

தெருவின் கோடியிலிருந்த ஒரு பழங்கால மாடிக் கட்டிடத்தைத் தொட்டு - அதன் மாடிப்படிகளில் 'தொம்... தொம்...' என்று ஏறி - ஐந்தாவது மாடிக்கு வந்து சேர்வதற்குள் வியர்த்துப் போனேன். பெருச்சாளிகள் சுதந்திரமாய் ஓடின.

''டேய் பிரபு! என்னடா இவ்வளவு பெருச்சாளிங்க இருக்கு.''

''தப்பு ஜெய்! இது பெருச்சாளி இல்லை. எலி. பெருச்சாளி இதைவிட பெரிசா இருக்கும்...''

என் வயிற்றில் திகில் ஊறியது. பிரபு கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான். நாசிக்கு பிடிக்காத ஒரு ஈர நெடி. அறை எட்டடிதான் இருக்கும். ஒரு கயிற்றுக் கட்டில். ஒரு டிரங்க் பெட்டி. அறையின் குறுக்கே ஓடிய

கயிற்றில் வவ்வாலாய் தொங்கும் பேண்ட் சர்ட்கள்.
கயிற்றில் வவ்வாலாய் தொங்கும் பேண்ட் சர்ட்கள்.

''இதுதாண்டா என்னோட சாம்ராச்சியம்...''

''வாடகை எவ்வளவு...?''

''இரு நூத்து அம்பது...''

''கொள்ளை...''

''நான் காலி பண்ணிக் கொடுத்தா... இதே ரூமுக்கு
ஐந்நூறு ரூபா வாடகை தர பார்ட்டி தயாரா இருக்கு...''
நான்வியப்பில் வாயைப் பிளக்க - பிரபு என் தலையில்
தட்டினான். ''இது தான் பம்பாய். ஒவ்வொரு நாளைக்கும்
ஆச்சரியம் தெரியும். அப்புறம் போகப் போக பழகிடும்.
பாத்ரூம் காலியா இருக்கு. நீ போய் குளிச்சுட்டு வா...
பாத்ரூம்ல காலைப் பார்த்து வைக்கணும். இல்லேன்னா
டிஸ்கோ டான்ஸ் ஆடி காலை முறிச்சுக்குவே.''

''நீ குளிச்சாச்சா...?''

''என்னோட குளியலெல்லாம் சாய்ந்தரம்தான்...! நீ
போய் குளிச்சுட்டு வா... இன்றைக்கு நாள் நல்லாயிருக்கு.
வேலை தேடற படலத்தைத் தொடங்கிடு.
சர்ட்டிபிகேட்டெல்லாம் கொண்டு வந்திருக்கியா?''

''அதை மறப்பேனா...?''

''குளிச்சு முடிச்சு நீட்டா டிரஸ் பண்ணிக்கிட்டு தாதர்ல
இருக்கிற மகாராஷ்டிர தொழிற்பேட்டைக்கு போயிடு.
அந்த தொழிற்பேட்டையில் கிட்டத்தட்ட ஐந்நூறு
தொழிற்சாலைகள், கம்பெனிகள் இருக்கு. முயற்சி
பண்ணிப் பாரு...''

''தாதர்க்கு எப்படி போகணும்?''

''குளிச்சுட்டு வா... விபரமா சொல்றேன்.''



சுத்தமாய் டிரஸ் பண்ணிக் கொண்டு - பிரபுராம் சொன்ன பஸ்சைப் பிடித்து, தாதர் நிறுத்தத்தில் இறங்கிக் கொண்டேன். சுற்றிலும் சினிமா நடிகர்களின் கட்டிடங்கள். ராட்சச கட்-அவுட் பேனர்கள். ஒவ்வொரு பேனரிலும் 'கபூர்'களும் 'கான்'களும் ஒவ்வொரு கதாநாயகியை அணைத்துக் கொண்டும் தூக்கிக் கொண்டும் இருந்தார்கள். இவர்களுக்கெல்லாம் இந்த அதிர்ஷ்டம் எங்கிருந்து



வந்து சேர்கிறது? கொடுத்து வைத்த புண்ணியவான்கள்.
லட்ச லட்சமாய் பணத்தையும் வாங்கிக் கொண்டு
விதவிதமாய் - டிரஸ்ஸையும் மாட்டிக் கொண்டு - வகை
வகையாய் பெண்களையும் தொட்டுக் கொண்டு -

'இதற்கெல்லாம் ஒரு அபாரமான குருட்டு அதிர்ஷ்டம்
வேண்டும்.' யோசித்துக் கொண்டே நடந்ததில் - பிரபுராம்
சொன்ன - அந்த தொழிற்பேட்டையின் 'போர்டு'
தெரிந்தது. 'மஹாராஷ்ரா இண்டஸ்டிரியல் எஸ்டேட் -
அம்புக்குறி போட்ட செம்மண் ரோட்டில் நடந்தேன்.
தொலைவில் ஆஸ்பெஸ்டால் கூரைகளை முக்காடு
போட்டுக் கொண்ட கட்டிடங்கள் வரிசையாய் தெரிந்தன.

'கடவுளே! பம்பாய்க்கு வந்த இந்த முதல் நாளே
வேலை கிடைத்துவிட வேண்டும் - வேலை கிடைத்ததும்
முதல் காரியமாய் வீட்டுக்கு ஒரு டெலிகிராம் கொடுக்க
வேண்டும்.'

தொழிற்பேட்டையை நெருங்கி - முதல் கட்டிடமாய்
நின்றிருந்த அந்த கார்பைட் பேக்டரியின் காம்பவுண்டு
கேட்டுக்குள் நுழைந்தேன். பீடி குடித்துக் கொண்டிருந்த
வாட்ச்மேன் என்னை மறித்தான்.

''க்யா வோனா?''

''மானேஜரைப் பார்க்கணும்.''

''மானேஜர்...? க்யா சமாச்சார்?''

'' 'வேலை வேண்டும்' என்பதற்கு - பிரபுராம்
சொல்லிக் கொடுத்த இரண்டு வார்த்தைகளை
சொன்னேன்.

''காம்... சாஹியே...''

''காம்?'' பரிகாசமாய் சிரித்த வாட்ச் மேன், தன்
கூண்டுக்குள்ளே நுழைந்து - 'வேலை காலியில்லை'
என்று ஆங்கிலத்திலும், இந்தியிலும் எழுதப்பட்ட
போர்டை எடுத்துக் காட்டினான்.

நான் வெளியே வந்தேன்.

பக்கத்து கம்பெனியின் காம்பவுண்டு கேட்டிலும்
அதே 'வேலை காலியில்லை' போர்டு. தொடர்ந்து நடக்க
ஆரம்பித்தேன்.

எல்லா பக்கமும் ஏமாற்றமான பதில்கள். சில
இடங்களில் நாய்மாதிரி 'வள்ளென்று எரிந்து
விழுந்தார்கள்.

ஏறக்குறைய மூன்று மணி நேரம்.

கால்கள் இடுப்புக்கு கீழே - பிழிந்த துணியாய் துவண்டன.

வயிற்றில் பசிப் புலியின் உறுமல் சத்தம் கேட்க ஆரம்பித்தது. இனிமேல் இந்த தொழிற்பேட்டையை சுற்ற முடியாது. நேராய் அறைக்கு போய்விட வேண்டியதுதான். தொழிற்பேட்டை காண்ட்டீனில் ஒரு ரூபாய் கொடுத்து மண்ணெண்ணெய் வாசம் அடிக்கும் டீயை வயிற்றுக்கு காட்டிவிட்டு நடந்தேன்.

முதன் முதலாய் ஒரு பயம் பிறந்தது.

'இந்த பம்பாயில் வேலை கிடைக்குமா?'

'பம்பாய் ஒரு பரந்த நகரம். தினம் ஒரு ஏரியா என்று பிரித்து வேலை தேடினாலும், சுத்தமாய் மூன்று மாசம் வேண்டும் சுற்றி முடிக்க!'

'ஏதாவது ஒரு பக்கம் வேலை கிடைக்காமலா போயிடும்?' யோசித்துக்கொண்டே மெயின் ரோட்டுக்கு வந்து - கூட்டமில்லாத பிளாட்பாரத்தில் தகிக்கும் வெயிலில் நடந்தேன். பிரபுராம் மனதில் வந்து நின்றான்.

'எவ்வளவு நல்ல நண்பன்! - 'ஜே.கே...! நீ எவ்வளவு நாள் வேணும் என்றாலும் என்கூட பம்பாய்ல இருக்கலாம். என்னோட ரூம்லேயே தங்கிக்கலாம்; நான் சாப்பிடற சாப்பாட்டு விடுதியில் என் கணக்கில் நீயும் சாப்பிட்டுக்கலாம். என்னோட சினிமா செலவு, சிகரெட் செலவு... எல்லாமே கட். அந்தப் பணம் உன்னோட செலவுக்கு! சீக்கிரமே வேலை கிடைக்க என்னோட வாழ்த்துக்கள்!' என்று கை குலுக்கி அனுப்பின பிரபுராமுக்கு, என்னோட உடம்புத்தோலை, செருப்பாகக்கூட தைத்துப் போடலாம்.'

பிரபுராமை நினைத்தபடி- பஸ் நிறுத்தத்தை நெருங்கிக்கொண்டிருந்த விநாடி-

ரோட்டின் எதிர்சாரியில் வேகமாய் போய்க்கொண்டிருந்த மாருதி கார் ஒன்று சட்டென்று வேகத்தைக் குறைத்துக்கொண்டு - ரோட்டைக் கிராஸ் செய்து - நான் நடக்கும் பிளாட்பாரம் ஓரமாக வந்து - சத்தமில்லாமல் நின்றது.

நான் நிமிர்ந்தேன்.

காரின் டிரைவிங் இருக்கையின் சன்னல் கண்ணாடி



மெல்ல மெல்ல கீழே இறங்க-

சன்னலின் சதுரத்தில்-

சுவர்ணாவின் முகம்.




நான் ஆச்சரியத்தில் தத்தளித்தேன். கண்கள் திக்கித்து வாய் பிளந்தேன்.

''சு...வர்...ணா.''

''ஜெய்...''

நான் அவளை நோக்கிப் போக - சுவர்ணா காரிலிருந்து இறங்கினாள். ஒரு மாதத்துக்கு முன்பு பார்த்ததைவிட நிறம் கூடியிருந்தாள். விலை உயர்ந்த வெளிநாட்டு சேலையொன்று - அவளுடைய மினுமினுப்பான உடம்பின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப படிந்திருந்தது. உதடுகளில் லேசான லிப்ஸ்டிக் பூச்சு. கைவிரல்களின் நீளமான நகங்களில் நெயில் பாலிஷ் பூச்சு.

''என்ன ஜெய்! அப்படி பார்க்கிறே?''

''சுவர்ணா! நான் பார்க்கிறது உன்னைத்தானா?''

''நானேதான்! முதல்ல கார்ல ஏறு. போய்கிட்டே பேசுவோம்-'' சொன்னவள் காரின் கதவை 'க்ளக்' என்று திறந்துவிட்டாள்.

நான் தயங்கினேன்.

''ம்... ப்ளீஸ். உள்ளே போ ஜெய்.''

நான் உள்ளே போனதும் - அவளும் டிரைவிங் சீட்டில் உட்கார்ந்து கதவைச் சாத்தினாள். காரை நகர்த்தினாள். உலகத்தின் எட்டாவது அதிசயத்தைக் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்தின மாதிரி - எனக்குத் தோன்றினாள். அந்த மாருதி கார் ஒரு புஷ்பக விமானம் மாதிரி என் மனதில் பட்டது.

''ஜெய்! பம்பாய் விஜயம் எதுக்கு!''

''வேற எதுக்கு? வேலை தேடத்தான்.''

''உனக்கு இன்னும் வேலை கிடைக்காததை நினைக்கும்போது மனசுக்கு ரொம்பவும் கஷ்டமாயிருக்கு.''

''என்னோட ஜாதகம் அப்படி! ஆமா, நீ டெல்லியில் இருக்கிறதா சொன்னாங்க! இங்கே எப்படி பம்பாயில்...?''

''யார்சொன்னாங்க?''

''கவுசல்யா.''

''கல்யாணம் முடிஞ்ச மறுநாளே டெல்லி போனது உண்மைதான். ஆனால், டெல்லி கிளைமேட் எனக்கு ஒத்துக்கலை. என்னோட கணவருக்கு பம்பாயிலும் வீடு இருக்கு. அதனாலே வேலையை டெல்லியிலிருந்து பம்பாய்க்கு மாற்றல் வாங்கிட்டு உடனே இங்கே வந்துட்டோம்.''

''உன்னோட அவருக்கு என்ன வேலை?''

''ஒரு தனியார் நிறுவனத்தில் துணை மானேஜர்! மாசத்தில் பாதி நாள் கேம்ப் போயிடுவார். அதிருக்கட்டும். அம்மா, கவுசல்யா எப்படி இருக்காங்க?''

''அம்மா வழக்கம் போல இருமிட்டிருக்காங்க. கவுசல்யா வழக்கம் போல வேலையை பார்த்திட்டிருக்கா.''

''நீ பம்பாய்க்கு வந்து எத்தனை நாளாச்சு?''

''இன்றைக்குத்தான் முதல் நாள்.''

''எங்கே தங்கியிருக்கே?''

''பிரபுராம் என்று ஒரு நண்பன். தேல்கல்லியில் ரூம்.''

''பாவம் ஜெய்! உன்னோட நிலைமை மாறவே இல்லை.''

''மாறும் என்கிற நம்பிக்கையும் எனக்கில்லை சுவர்ணா! உன்னோட கல்யாண வாழ்க்கை எப்படியிருக்கு?''

''சந்தோஷமாயிருக்கு.''

''காரை ஓட்ட எப்ப பழகிட்டே?''

''ரொம்ப சுலபம். ஜிம்கானா மைதானத்துல நாலே நாள்ல கத்துகிட்டேன். கார் ஓட்டறது ஒன்றும் பெரிய இந்திர வித்தை இல்லை.''

''உன் மேல பிரியமா இருக்காரா?''

''டன் டன்னா.''

''இதுக்கெல்லாம் ஒரு சுழி வேணும்! பிறக்கும்போதே பிரம்மன் சரியாய் எழுதியிருக்க வேண்டும்!'' பெருமூச்சு விட்டேன்.

''ஜெய்!'' காரை ஒரு வளைவில் திருப்பினாள் சுவர்ணா.



''ம்.''

''இப்ப உனக்கு ஏதாவது வேலை இருக்கா?''

''ஒரு வேலையும் கிடையாது. ரூமுக்கு போய் தூங்க வேண்டியதுதான்.''

''எங்க வீட்டுக்கு போகலாமா?''

''இப்பவா?''

''ம்.''

''இப்ப வேண்டாம் சுவர்ணா! நீ முகவரியைக் கொடு. எனக்கொரு வேலை கிடைச்ச பிறகு, நானே உங்க வீட்டுக்கு வர்றேன்.''

''ஏன், இன்றைக்கென்ன?''

''இன்றைக்கு என்னோட நிலைமை சரியில்லை.''

''இப்படியெல்லாம் விரக்தியா பேசாதே! நீ என் வீட்டுக்கு கண்டிப்பா வர்றே!'' சொன்னவள் காரின் வேகத்தை அதிகப்படுத்துவதற்காக ஆக்ஸிலேட்டரை மிதித்தாள்.

நான் சுவர்ணாவை ஆச்சரியமாய் பார்த்தேன். ஒரே மாதத்துக்குள் சுவர்ணா எவ்வளவு மாறிவிட்டாள். அவளையும் அறியாமல் ஒரு பணக்காரத்தனம் அவளோடு ஒட்டியிருந்தது. என்னை எங்கேயாவது பார்க்க நேர்ந்தால் என் கல்யாணத்துக்கு ஏன் வரவில்லை என்று ஒரு பெரிய சண்டையே போடுவாள் என்று நினைத்திருந்தேன். ஆனால் அதெல்லாம் ஒரு விஷயமே இல்லை என்கிற மாதிரி அதைப் பற்றிய பேச்சே எடுக்கவில்லை.

''என்ன ஜெய், அப்படி பார்க்கிறே?''

''ஒண்ணுமில்லை.''

கார் இப்போது மக்கள் நெரிசல் அதிகம் இல்லாத ரோட்டில் வேகமாய் பீறிட்டுக் கொண்டிருந்தது.

''உன் வீடு எந்த ஏரியா?''

''மலபார் ஹில்ஸ்.''

''ரொம்ப தூரமா?''

''நோ... நோ... இப்ப போயிடுவோம்.''

''இப்ப நீ மட்டும் தனியா கார்ல எங்கே போயிட்டு வர்றே சுவர்ணா?''

''தாதர்ல இருக்கிற லேடீஸ் கிளப்புக்கு.''

''உன்னோட கணவர் இப்போ வீட்ல இருப்பாரா?

ஆபீசில் இருப்பாரா?''

''இரண்டும் இல்லை. வெளியூரில் இருக்கார்.''

''அவர் இருக்கும்போது ஒரு நாளைக்கு உன் வீட்டுக்கு வர்றேன்.!''

''பேசக்கூடாது! வீடு வந்தாச்சு!'' சொன்னவள் காரை ஒரு பங்களாவின் காம்பவுண்டு கேட்டுக்குள் நுழைத்து - சுற்றிலும் ரோஜாத் தொட்டிகள் உட்கார்ந்திருந்த போர்டிகோவுக்குள் கொண்டு போய் நிறுத்தினாள்.

உள்ளேயிருந்து - சுத்தமான வேலைக்காரி ஒருத்தி ஓடி வந்தாள். சுவர்ணா அவளிடம், ''பின்சீட்ல பை ஒண்ணு இருக்கு. உள்ளே கொண்டாந்துடு!'' என்று சொல்லி விட்டு என்னிடம் திரும்பினாள்.

''வா, ஜெய்!''

பிரமிப்பில் கண்களை விரித்துக் கொண்டு அவள் பின்னால் போனேன். அழகான பங்களா. பங்களாவின் ஒவ்வொரு அங்குலமும் பணக்கார மொழி பேசியது. ஒவ்வொரு கதவும் 'நான் தேக்கு' என்று சொல்லியது.

ஹாலில் நடந்தோம்.

''சுவர்ணா! பங்களா அற்புதமா இருக்கு.''

''என் கணவரோட பரம்பரைச் சொத்து இது ஒண்ணுதான். வீட்டை அலங்காரம் பண்றதுல அவருக்கு நல்ல ரசனை.''

ஒரு அறைக்குள் நுழைந்தோம். அறை முழுக்க கம்பளம் விரிக்கப்பட்டு மெத்தென்றிருந்து. நடுவே சோபாக்கள். சுவர்களில் பூ ஜாடிகள். மீன் தொட்டிகள். மாடர்ன் ஓவியச்சட்டங்கள்.

''உட்கார் ஜெய்.''

சோபாவில் சுகமாய் பொதிந்தேன். களைத்துப் போன என் உடம்புக்கு இதமாய் இருந்தது. சோபாயின் மேலிருந்த டேப்ரிக்கார்டரின் பட்டனைத் தட்ட - ஒரு ஆங்கில இசை லேசாய் இழைந்தது.

''என்ன சாப்பிடறே ஜெய்?''

''ஒண்ணும் வேண்டாம்.''

''ஒண்ணும் வேண்டாமா? நல்ல கதை இது! முதல்ல ஏதாவது ஜூஸ் சாப்பிடு. கொஞ்ச நேரம் கழிச்சு சாப்பாடு சாப்பிட்லாம்.''

''சாப்பாடெல்லாம் வேண்டாம் சுவர்ணா. நான்



ரூமுக்கு போகணும். என் நண்பன் காத்திட்டிருப்பான்.''

''நோ... நோ... நீ சாப்பிடாமல் போகக்கூடாது.'' சொன்னவள் வேலைக்காரியைக் கையசைத்து கூப்பிட்டு ஜூஸ் கொண்டுவரச் சொன்னாள்.

''சுவர்ணா!''

''என்ன ஜெய்?''

''எனக்கு இப்போ எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

''எதுக்கு சந்தோஷம்?''

''என்னை நீ கல்யாணம் பண்ணியிருந்தா உனக்கு இந்த சொர்க்கலோகம் கிடைச்சிருக்குமா?''

சுவர்ணா சிரித்தாள்.

அந்த சிரிப்பில் ஒரு விரக்தியும், கசப்பும் தெரிந்ததை கவனித்தேன்.

''என்ன சிரிக்கிறே?''

''எனக்கு கிடைச்ச வாழ்க்கை சொர்க்கலோகம்னு சொன்னியே! அதை நினைச்சேன். சிரிப்பு வந்துடுச்சு.''

''ஏன்- நான் சொன்னதுல என்ன தப்பு? அழகான கணவர், நல்ல உத்யோகம், அருமையான பங்களா, வசதியான வாழ்க்கை - இதைக் காட்டிலும் ஒரு பெண்ணுக்கு என்ன வேணும்?''

''எல்லாமே சொன்னே! ஆனால், ஒரு பொண்ணு விரும்பற முக்கியமான விஷயத்தை மறந்துட்டியே, ஜெய்?''

நான் விழித்தேன்.

அவள் புன்னகையோடு கேட்டாள்.

''ஒரு பெண் ஒருவருக்கு மனைவியானதும் - அவள் எதிர்பார்க்கிற அடுத்த ஸ்தானம் எது தெரியுமா?''

''எது?''

''தாய் ஸ்தானம். ஒரு குழந்தைக்கு தாயாகக் கூடிய பாக்கியம்.''

''ஏன், அந்த பாக்கியமும் உனக்கு கிடைக்காமலா போகும்? கல்யாணமாகி ஒரு மாசந்தானே ஆச்சு?''

''நோ... ஜெய். பத்து வருடமானாலும் எனக்கு அந்த பாக்கியம் கிடைக்காது.''

நான் அதிர்ச்சியோடு அவளைப் பார்த்தேன்.

''சுவர்ணா! நீ என்ன சொல்றே?''

''என் கணவர் அழகானவர்தான். புத்திசாலிதான். சொத்துள்ளவர்தான். ஆனால், அவராலே என்னை தாயாக்க முடியாது. அவரும் ஒரு குழந்தைக்கு அப்பாவாக முடியாது.''

''சு...வர்...ணா...''

சுவர்ணா தலைகுனிந்தபடியே - சோபாவின் துணியை ஆட்காட்டி விரலால் கீறிக்கொண்டே மெல்லிய குரலில் சொன்னாள்.

''அவர் என்னை ஏமாத்திட்டார் ஜெய். தாம்பத்திய வாழ்க்கைக்கு அவர் கொஞ்சம் கூட தகுதியில்லாதவர். நான் அவருக்கு வெறும் அலங்காரப் பொம்மை. ஜெய்! நான் உன்கிட்டே சில விஷயங்களை மனம் விட்டுப் பேசணும். வேலைக்காரி இருக்கிற இந்த வீட்டில் பேச முடியாது. இந்த வேலைக்காரி அவருக்கு ரொம்பவும் விசுவாசமானவள். நீ இன்றைக்கு சாயந்தரம் ஜுஹு பீச்சுக்கு வா. தனியா உட்கார்ந்து பேசுவோம்.''

என்னையுமறியாமல் நான் தலையாட்டினேன்.

ஜுஹு கடற்கரை. மாலை ஆறுமணி.



மாருதி கார் தூரத்தில் நின்றிருக்க - மணலில் சிறிது தூரம் நடந்து வந்து - ஒரு படகுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்தோம் நானும் சுவர்ணாவும். அரபிக்கடல் காற்று எங்கள் இருவரையும் மயிலிறகு மாதிரி வருடிக்கொடுத்தது. அலைகள் தரையை 'சோ... சோ...' என்று மொத்திக் கொண்டிருந்தன.

தலையைக் குனிந்திருந்த சுவர்ணா மணலில் கோடு கோடாய் வரைந்தபடி மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தாள். ''பரீட்சை எழுத உட்காரும்போது பேனாவில் இங்க் இல்லேன்னா ஒருத்தருக்கு என்ன அதிர்ச்சி ஏற்படுமோ, அதே அதிர்ச்சிதான் எனக்கும்.''

''உன்னோட கணவருக்கு அவர்கிட்டே இருக்கிற குறை தெரியுமா தெரியாதா?''

''நல்லாவே தெரியும்.''

''பின்னே ஏன் கல்யாணம் பண்ணிகிட்டார்?''



''அவரோட சுயநலத்துக்காகத்தான். தன்னாலே ஒரு பொண்ணுக்கு கணவனா இருக்க முடியுதுன்னு மத்தவங்களுக்கு காட்டத்தான்.''

''அந்தக் குறையைப் பற்றி அவர்கிட்டே பேசிப் பார்த்தியா?''

''பேசிப் பார்த்தேன்.''

''என்ன சொன்னார்?''

''ஒரு குழந்தையை தத்து எடுத்துகிட்டா போச்சுன்னு சொல்றார்.''

''நல்ல டாக்டர்கிட்டே அவரைக் கூட்டிகிட்டு போய் டிரீட்மெண்ட் எடுக்கலாமே.''

''ஏற்கனவே அவர் டெல்லியிலேயும் - பம்பாயிலேயும் நிறைய டாக்டர்களைப் பார்த்து ஆலோசனை பண்ணியிருக்காராம்.''

''ஒரு பெண்ணை எப்படி இவர் ஏமாற்றலாம்?''

''தப்பு அவர் பேரில் மட்டும் இல்லை ஜெய். எங்க குடும்பத்து பேர்லேயும் இருக்கு. வரதட்சிணை கேட்காத - வசதியான டெல்லி மாப்பிள்ளை என்றதும் சரியா விசாரித்துப் பார்க்காமே, முடிவு எடுத்துட்டாங்க. துணிக்கடைக்கு போனால் அங்கே தள்ளுபடியில் டேமேஜ் துணி வைச்சிப்பாங்க. பார்த்தா டேமேஜ் மாதிரியே தெரியாது. ஏதோ துளியூண்டு அழுக்காயிருக்கும், அல்லது கிழிஞ்சிருக்கும். அல்லது டிசைன்ல ஏதாவது தப்பாகியிருக்கும். அந்த மாதிரியான டேமேஜ் துணிதான் இவர். தள்ளுபடி - வரதட்சிணை.

பேசப் பேச சுவர்ணாவின் பெரிய கண்களில் நீர் தளும்பி சிதறியது. சிறிது நேரம் மவுனித்துவிட்டு, தொடர்ந்தாள்.

''ஜெய்! இந்தக் கல்யாணத்தை அவர் உள்நோக்கத்தோடுதான் பண்ணியிருக்கார்.''

''உள்நோக்கமா?''

''ஆமா. இவரோட வசதிக்கு ஒரு பெரிய இடத்துப் பெண்ணை திருமணம் பண்ணிக்கிட்டா இவரோட விஷயம் தெரிஞ்ச மறு நிமிடமே விவாகரத்து நோட்டீஸ் அனுப்ப தயங்க மாட்டாள். அம்மா, அப்பாவுக்குக் கட்டுப்பட்டு பெட்டிப் பாம்பா வளர்ந்த என்னை மாதிரி பொண்ணுன்னா 'இதான் தலைவிதி'ன்னு

சகிச்சுட்டிருப்பான்னு முடிவு பண்ணித்தான் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கார். ஆனால், அவர் கணக்கைத் தப்பாக்கப்போறேன்...''

திடுக்கிட்டு அவளைப் பார்த்தேன்.

''விவாகரத்து பண்ணப் போறியா சுவர்ணா?''

''நோ, நோ! அது முட்டாள்தனம். அதிர்ஷ்டவசமா கிடைச்சிருக்கிற இந்த பணக்கார வாழ்கையையே உதறித் தள்ளின மாதிரி ஆயிடும்! முள்ளை முள்ளால் எடுக்க வேண்டியதுதான். அவர் என்னை ஏமாத்தினார்; ஏமாத்திட்டிருக்கார்; நான் அவரை ஏமாத்தப் போறேன்.''

''சுவர்ணா! நீ என்ன சொல்றே?''

''நான் தெளிவா பேசிட்டிருக்கேன் ஜெய்! நீயும் நானும் இணையறதுக்கு ஒரு இரண்டாவது வாய்ப்பு கிடைச்சிருக்கு.''

''சுவர்ணா... என்ன சொல்றே...?''

''நாம ரெண்டு பேருமே ஒருத்தரையொருத்தர் மனதார விரும்பினோம். ஆனால், சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் பயந்து நம்ம காதலை நாம அழிச்சுக்கிட்டோம்.''

நான் திக்பிரமையோடு அவளையே பார்த்துக் கொண்டிருக்க - அவள் தொடர்ந்தாள்.

''நீ விரும்பினால் இந்த நிமிடமே நீயும் நானும் இணையலாம் ஜெய்.''

''சுவர்ணா... நீயா இப்படியெல்லாம் பேசறே...?''

சுவர்ணா சிரித்தாள்.

''நான் பேசலை. எனக்கு கிடைச்ச ஏமாற்றம் பேசுது.''

''வேண்டாம்! உன் பேச்சு சரியில்லை. உன் கணவனைப் பழி வாங்கிறதா நினைச்சுட்டு வாழ்க்கையை நாசம் பண்ணிக்காதே.''

''இல்லை, ஜெய்! நான் செய்யப் போறதுதான் சரி.''

''கேவலம்! உன்னோட உடல் பசிக்காக நாம இந்த பாவத்தை பண்ணியாகணுமா?''

''உடல் பசிதான் என் நோக்கம்ன்னா, எங்க வீட்டு கட்டுமஸ்தான கார் டிரைவர் இருக்கான். நீ தேவை இல்லை. என்னைப் புரிஞ்சுக்க முயற்சி பண்ணு ஜெய். எனக்கு நீ வேணும்... உன்னோட இதமான அருகாமை வேணும்.''



''நீ என்ன சொன்னாலும், இது தப்புதான்.''

''தப்பாவே இருக்கட்டும். உன்னைப் பார்த்த நிமிடமே அந்தத் தப்பைச் செய்ய நான் தயாராகி விட்டேன்.''

''நான் தயாராயில்லை.''

''முன்னே நான் என்ன சொன்னாலும் கேட்பாயே ஜெய்?''

''அப்ப நான் தெளிவாயில்லை. இப்ப நீ தெளிவா இல்லை...''

''ஜெய்! என்னைப் புரிஞ்சுக்காமல் நீ பேசிக்கிட்டிருக்கே. நாம செய்யப் போறது ஒரு நியாயமான தப்பு. இதனால நம்ம இரண்டு பேருக்குமே ஆதாயம் இருக்கு. நான் தவற விட்ட ஒரு பொருள் திரும்பக் கிடைக்குது. நீ வேலைக்கே அலைய வேண்டியதில்லை. உன் தங்கை கவுசல்யாவுக்கு அமர்க்களமா கல்யாணம் பண்ணலாம். அம்மாவுக்கு நீ ஆசைப்பட்ட மாதிரி மருத்துவம் பார்க்கலாம்...''

நான் அதிர்ச்சியாய் நிமிர்ந்தேன். ''சு... வர்... ணா!''

''அவர் கம்பெனியில் ஒரு நல்ல வேலை காலியா இருக்கு. கைநிறைய சம்பளம் கிடைக்கும். நான் நினைச்சேன்னா அதை உனக்கு வாங்கித்தர முடியும்.''

அவள் பிரயோகித்த அந்த வாக்கியம் விர்ரென்று என்மேல் பாய்ந்தது. படித்து முடித்த நாளிலிருந்து இந்த நாள் வரை வேலைக்காக அலைந்த ஒவ்வொரு அலைச்சலும் ஸ்டில் ஸ்டில்லாய் மனதில் எழுந்தது.

''சுவர்ணா! எனக்கு ஆசை காட்டறியா?''

''என் ஆசையே நீ தான் ஜெய்!'' சொன்னவள் என் கையைப் பற்றினாள்.

உதற வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை.




பம்பாய்க்கு வந்த அன்றைக்கு இருந்ததைக் காட்டிலும் நான் இப்போது கொஞ்சம் உற்சாகத்தோடு இருந்தேன். சுவர்ணா சொன்ன வார்த்தைகள் மனசுக்குள் ரங்கராட்டினம் போல் சுற்றின.

என்னுடைய மாற்றத்தை பிரபுராம்

கவனித்திருக்க வேண்டும். அன்றைக்கு வெளியே கிளம்பும்போது கேட்டான்.

''என்னடா ஜெய்! நாலைஞ்சு நாளா சந்தோசமா இருக்கே... எங்கேயாவது வேலை கிடைக்கிற மாதிரி இருக்கா?''

''வேலை கிடைச்ச மாதிரிதான்...''

இன்னமும் அவனிடம் சுவர்ணாவைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை. தினமும் நான் வேலை தேடப் போவதாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறான். ஜுஹு பீச் ஓரமாக உட்கார்ந்திருக்கற ஸ்டார் ஓட்டலின் ஏ.சி. சூழ்நிலைக்குப் போய் அரையிருட்டில் சுவர்ணாவோடு பேசிக் கொண்டு இருந்துவிட்டு வருகிறேன் என்பதெல்லாம் தெரியாது.

''உனக்கு சுவர்ணாவைத் தெரியுமா பிரபு?''

''எந்த சுவர்ணா?''

''நம்ம ஊர்ல... காபி பாருக்கு என்னைப் பார்க்க அடிக்கடி வருவாளே...?''

''உன்னோட காலேஜ் மேட்...? டுடோரியல் சென்ட்டரில் வேலை பார்த்திட்டிருந்ததே.''

''அவளேதான்.''

''அந்தப் பொண்ணுக்கென்ன இப்போ?''

''அவளுக்கு கல்யாணம் ஆகி ஒரு மாசம் ஆச்சு. இப்போ பம்பாயில்தான் இருக்கா.''

''சரி-'' பிரபுராம் ஆர்வமாய் கேட்டான்.

''அவளோட கணவன் வசதியான ஆள். ஒரு பெரிய கம்பெனியில் நல்ல வேலையில் இருக்கான். நாலைஞ்சு நாளைக்கு முன்னாடி அந்த சுவர்ணாவை வழியில் பார்த்தேன்...''

''அப்புறம்?''

''உனக்கு வேலை வாங்கித் தர்றதுக்கு நானாச்சுன்னு சொன்னாள்.''

''உண்மையாகவா?''

''ம்.''

''நல்ல வாய்ப்பு கிடைச்சிருக்கு. ஒரேடியா அமுக்கிடு.''

''அதுக்காகத்தான் போயிட்டிருக்கேன்.''

''வழக்கமா எங்கே சந்திப்பீங்க?''



''ஜுஹு பீச்சில் இருக்கிற 'மாஸ்' ஓட்டல்.''

''அடப்பாவி! அது ஐந்து நட்சத்திர ஓட்டலாச்சே!''

''எந்த ஓட்டலாயிருந்தா எனக்கென்ன? பில்லை கொடுக்கிறது அவள்தானே?''

அவன் சிரித்தான். அந்த எலிவலை அறையை விட்டு வெளியே வந்தேன். நிமிர்ந்தால் - குனிந்தால் - இடித்துக் கொள்கிற இந்த பற்றாக்குறை அறையெல்லாம் இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான்.

பஸ்சில் பயணிக்கிறபோது லேசாய் மனம் வலித்தது.

'சுவர்ணாவோடு நான் இப்படி தொடர்பு வைத்துக் கொள்வது சரிதானா?'

வேலை கிடைக்கப் போகிற ஆசையில் அவள் சொன்னதற்கெல்லாம் சரி சரி என்று தலையாட்டி வைக்க வேண்டியதுதான். பிறகு மெல்லப் பேசி அவள் மனதை மாற்ற வேண்டியதுதான். சுவர்ணாவின் துணிச்சல் எனக்கு இன்னமும் பிரமிப்பாக இருந்தது.

பஸ் நிறுத்தம் வர - பஸ்சை விட்டு உதிர்ந்தேன். ஜுஹு பீச்சில் மணலில் நடந்தேன். கடற்கரைக் காற்று சில்லென்று உடம்பை தடவிக் கொடுத்தது. எல்லாரும் கார்களில்தான் வந்து இறங்கினார்கள். நடந்து அந்த ஓட்டலுக்குள் செல்பவன் அநேகமாய் நான் ஒருவனாகத் தான் இருக்க வேண்டும்.

ஏற்கெனவே ஓரிரு தடவை வந்திருப்பதால் கூச்சமில்லாமல் உள்ளே நடந்தேன். இடதுபுறம் திரும்பினால் நுழைவாயில். கண்ணாடிக் கதவு 'தள்ளு' என்ற எழுத்துக்களோடு கனமாய் சாத்திக் கிடந்தது.

தள்ளினேன்.

உள்ளே நிலவும் அரைகுறை இருட்டு ஒரு சில விநாடிகளுக்குப் பின் பழக்கமாக - மேசை எண் 5-ஐ நோக்கிப் போனேன். எப்போதும் சுவர்ணா அதைத்தான் ரிசர்வ் செய்து வைத்து இருப்பாள்.

காத்திருந்தாள் சுவர்ணா. என்னைப் பார்த்ததும் மலர்ந்தாள். ''வா, ஜெய்'' என்று சொல்லி கையைப் பற்றிக் கொண்டாள். நான் உட்கார்ந்ததும் தொடர்ந்தாள்.

''இன்றைக்கு ஒரு சின்ன புரோக்கிராம்...''

''என்ன...?''

''என் கணவர்கிட்டே உன்னை அறிமுகப்படுத்தணும்.

இன்றைக்கு அவர் ஓய்வா இருக்கார்.''

நான் திகைப்பாய் அவளைப் பார்த்தேன்.

''வீட்லதான் இருக்காரா?''

''ஆமா.''

''நீ என்ன சொல்லிட்டு இங்கே வந்தே...?''

''என் நண்பர் ஒருத்தர் ஓட்டல் 'மாஸ்'ல காத்திட்டிருப்பார். உங்களுக்கு அவரை அறிமுகம் பண்ணி வைக்கணும். போய் கூட்டிட்டு வர்றேன்னு சொல்லிட்டு வந்தேன்.''

''ஓட்டலுக்கு வந்து ஒரு அந்நிய ஆணை அழைச்சிட்டு...? ஏன் சுவர்ணா... அவர் உன்னை தப்பா நினைச்சுக்க மாட்டாரா?''

''ஒண்ணும் நினைச்சுக்க மாட்டார்.''

நீளமான தம்ளர்களில் வந்த சாக்கலேட் மில்க்ஷேக்கை ஜில்லென்று - இதமாய் தொண்டைக்குள் இறக்கி முடித்த பின் - இருவருமாய் ஓட்டலை விட்டு வெளியே வந்தோம். கார் நிறுத்தத்தில் வரிசையாய் வழுக்கைத் தலைக் கார்கள் அதனதன் எஜமானர்களுக்காக விசுவாசமாய்க் காத்துக் கொண்டிருந்தன.

வரிசையில் அவளுடைய காரைத் தேடிக் கொண்டே கேட்டேன்.

''சுவர்ணா, உன் காரைக் காணோமே?''

''அதோ பத்தாவது கட்டத்துல.''

''அங்கே இல்லையே?''

''ஓ! நீ மாருதியைத் தேடறே? நான் அவரோட காரை எடுத்திட்டு வந்திருக்கேன். ஸ்டாண்டர்ட் 2000.''

சுவர்ணா கார் கதவைத் திறந்தாள். அவளும் நானும் அருகருகே அமர்ந்தோம். கார் ஓட்டலைக் கடந்தது. கண்ணாடி சன்னலுக்கு வெளியே பிளாட்பாரங்கள் சர்சர்ரென்று பின்னால் நழுவின. சுவர்ணாவின் விருப்பத்துக்கு இணங்குவதா, வேண்டாமா என்பதில் என்னால் இன்னமும் ஓர் உறுதியான முடிவுக்கு வர முடியவில்லை.

அடுத்தவன் பெண்டாட்டியோடு காதல், கத்தரிக்காய் என்பதெல்லாம் எவ்வளவு பிரமாண்டமான குற்றம் என்பது என்னுடைய ஆறாவது அறிவுக்கு நன்றாகவே புலப்படுகிறது.



ஆனால், மனசு வழுக்கி விடுகிறதே!

இங்க் தெளித்த மாதிரி மனசில் ஒட்டிக் கொண்ட சபலத் துளிகள்.

எந்த வாழ்க்கைக்காகக் காத்திருந்தேனோ அந்த வாழ்க்கை சுவர்ணாவின் ரூபத்தில் வந்து நின்றிருப்பதாகத் தோன்றும் ஒரு பிரமை. 'இவளை என்னால் திருத்த முடியுமா?'

''ஜெய்!''

அவள் கூப்பிட்டதால், யோசனையிலிருந்து கழன்றேன்.

''ம்...''

''ஏன் ஒண்ணுமே பேசாமே வர்றே?''

''என்ன பேசறது?''

''சரி, பேசாதே! பக்கத்துல வந்து உரசிக்கிட்டு உட்காரு.''

''சுவர்ணா!''

அவள் சிரித்தாள்.

''கிட்டே வந்தா ஷாக்கா அடிச்சிடும்? ஒரு சின்ன சில்மிஷம்... 'வெடுக்'னு இடுப்பில ஒரு கிள்ளு... எதுவுமே இல்லையே...? இப்படிக் கையைக் கட்டி புத்தராட்டம் உட்கார்ந்துட்டு வர்றியே!''

நான் பதில் பேசாமல் அவளையே பார்த்தேன். 'சுவர்ணா தானா இவள்?' - சிரிப்போடு அவள் தொடர்ந்தாள்.

''எனக்குத்தான் இப்ப உன்கிட்டே ஏதாவது சில்மிஷம் பண்ணணும் போலத் தோணுது. உன்னோட மீசையைப் பிடிச்சு இழுத்துப் பார்க்கணும் போல ஆசை! இழுக்கட்டுமா?''

இழுத்துவிட்டாள்.

''ஆ...!''

''அவரை நீ வந்து பார் ஜெய். மீசையே கிடையாது. என்னவோ வேண்டுதல் மாதிரி தினமும் காலைல ஆறு மணியானால் போதும். பிளக்கை மாட்டி சுவிட்சைத் தட்டி மூஞ்சியை மழிச்சுக்குவார். பார்த்தா ஒரு பொண்ணோட முகம் மாதிரியே இருக்கும்.''

கார் இரண்டொரு திருப்பங்களை ஜீரணித்து அவளுடைய பங்களாவைத் தொட்டது. என் மனசுக்குள்

லேசாக உதறல் எடுத்தது. உடம்பு முழுக்க படபடப்பு. வியர்வை.

'இந்த உதறலுக்கும், படபடப்புக்கும் அவசியமில்லை. இந்த நிமிடம் வரைக்கும் நான் எந்தத் தப்பும் செய்யவில்லையே...!' - மனதை சமாதானப்படுத்திக் கொண்டேன்.

''இறங்கு ஜெய்...''

அவள் கூப்பிட்டபோதுதான் - காரை போர்ட்டிகோவில் நிறுத்தி - நான் இறங்கி வருவதற்காக காத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தேன். இறங்கினேன்.

''என்ன ஜெய்... இப்படி வேர்த்துப் போயிருக்கே?''

''என்னமோ தெரியலை.''

''நீ பயப்படறே. இப்படி பலியாடு மாதிரி வராதே- ராஜநடை போட்டுக்கிட்டு சிங்கம் மாதிரி வா...''

உள்ளே அழைத்துப் போனாள்.

ஹாலில் சோபாவில் என்னை உட்காரவைத்து ஆங்கில வார இதழ் ஒன்றைக் கையில் திணித்து விட்டு-

''உட்கார்ந்திரு ஜெய்... அவரைக் கூட்டிட்டு வர்றேன்.''

மாடிப் படிகளில் சத்தமில்லாமல் ஏறினாள். குரல் கொடுத்துக் கொண்டே போனாள்.

''மனோ... மனோ...''

வார இதழில் பக்கங்களை அசட்டையாய் புரட்டினேன். சுவர்ணாவும் முகமில்லாத அவள் கணவனும் மனசை சங்கடப்படுத்தினார்கள். வேறு எதையாவது நினைக்கலாம். லெட்டர் போட்டு எத்தனை நாளாகி விட்டது? அம்மாவும் கவுசல்யாவும் பதிலே போடவில்லையே!

மாடிப்படிகளில் சத்தம் கேட்டது. நிமிர்ந்தேன்.

மனோகரின் கையை தன் கையோடு இணைத்தபடி படியிறங்கிக் கொண்டிருந்தாள் சுவர்ணா. அடுத்த நிமிடம் இருவரும் என்னை நெருங்கி நின்றார்கள்.

''ஜெய்! இவர்தான் மனோ! என் இனிய கணவர்.''

நான் எழுந்து நின்று ''வணக்கம்'' சொல்லி கைகூப்பினேன்.

''ஹலோ...'' அவன் புன்னகைக்கு சுவர்ணா



சிரித்தாள்.

''ஜெய்! என்ன இது- உங்க கிளாஸ் வாத்தியார் வந்த மாதிரி எந்திரிச்சு நின்று வணக்கம் போடறே!''

தொடர்ந்து மனோகரிடம் சொன்னாள்.

''இது ஜெய் என்கிற ஜெயகிருஷ்ணன். ஊர்ல நம்ம வீட்டுக்கு பின்னாடி வீடுதான்...''

''திருமணத்தின்போது இவரைப் பார்த்த ஞாபகம் இருக்கு...''

''இந்தக் கதைதானே வேண்டாம் என்கிறது! ஜெய் நம்ம கல்யாணத்துக்கே வரலை...''

''ஆமா சார்... ஒரு சின்ன வேலையா வெளியூர் போயிட்டேன்...''

''உட்காருங்க ஜெய்-'' என்றான் மனோகர்.

நான் சோபாவில் உட்கார்ந்தேன்.

மனோகர் ஆரோக்கியமாய் - அழகாய் இருந்தான். ஒரு பெண்ணின் முகத்தைப் போல் மழமழப்பான முகம். என் கைகளைப் பற்றிக் கொண்டு வெகு இயல்பாய் பேச ஆரம்பித்தான்.

''மிஸ்டர் ஜெய்! நான் ஒரு பிசியான கம்பெனி மானேஜர். சினிமா, ஓட்டல், பார்க், பீச் இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. அதுக்கெல்லாம் ஒரு அஞ்சு நிமிடம் கூட என்னால் செலவழிக்க முடியாது. சதா ஆபீஸ் நினைப்புதான். ஏதோ இந்த மாதிரி ஓய்வு நாள்லதான் என்னால் மனைவியை கவனிக்கவே முடியும். மற்ற நாட்களில் என்னை எதிர்பார்க்காமல் இவள் ஓட்டல், சினிமா, ஷாப்பிங்னு எங்கே போனாலும் எனக்குக் கவலை இல்லை. இவளுக்கு நீங்க கம்பெனி கொடுங்க.''

மூச்சுவிடாமல் பேசிக்கொண்டே போன அவன் - என் முகத்தைப் படித்த மாதிரி தொடர்ந்தான்.

''மனைவிக்கு இத்தனை சுதந்திரம் தரலாமான்னு தமிழ்நாட்டு சூழ்நிலையில் வளர்ந்த உங்க மனசு யோசிக்கும். தாராளமா தரலாம். மனைவி மேல நம்பிக்கை இல்லாத கணவன்தான் யோசிப்பான்.''

சுவர்ணா குறுக்கிட்டாள் கணவனிடம்.

''மனோ... இவருக்காக... நோ... நோ... எனக்காக நீங்க ஒரு உதவி செய்யணும்...''

''என்ன?''

''இவருக்கு உங்க கம்பெனியில் ஒரு வேலை
வேணும்.''
''வேலை?'' மனோகர் நெற்றியை சுருக்கினான்.
''ஏதோ வேலை காலியா இருக்கு... பத்திரிகையில்
விளம்பரம் தரணும்னு போன வாரம் போன்ல யாரோடோ
பேசிட்டிருந்தீங்களே...''
''இவர் என்ன படிச்சிருக்கார்...?''
''பி.ஏ. பொருளாதாரம்'' - நான் குறுக்கிட்டு
சொன்னேன்.
''நாளைக்கு கம்பெனிக்கு வாங்க... ஏற்பாடு
பண்றேன்.''



மறுநாள் காலை பத்து மணி.
சுவர்ணா கேட்ட வேலையை
மனோகர் எனக்குத் தரவில்லை. அது
கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட
வேலையாம். நான் படித்திருப்பது
பி.ஏ. பொருளாதாரம். பயிற்சி
கொடுத்தெல்லாம் தேற்ற முடியாதாம்.
ஆனால், சுவர்ணாவின் வார்த்தைகளுக்கு
எவ்வளவு மதிப்புத் தருகிறான் என்பது புரிந்தது.
நிர்வாகப் பிரிவில் இல்லாத பதவி ஒன்றை உருவாக்கி
வேலைக்கான உத்தரவை அடிக்கச் செய்து என் கையில்
கொடுத்தான்.
''மிஸ்டர் ஜெய்... இது உருவாக்கப்பட்ட வேலை.
நீங்கள் பார்த்து செஞ்சாத்தான் வேலை. நான் போர்ட்
மீட்டிங்ல இருக்கறப்பதான் சுவர்ணா ஷாப்பிங்
போகணும், சினிமா போகணும், கம்பெனி தரக்கூட
யாருமே இல்லை. வாங்கன்னு அடம் பிடிக்கிறாள்.
இனிமேல் அப்படி போன் வந்தால் நான் உங்களை
அனுப்பிடுவேன். நீங்க கம்பெனி தரணும். ஓ.கே...?''
நான் அப்படியே அயர்ந்து போய் உட்கார்ந்திருந்தேன்.
இப்படியும் ஒரு கணவனா?
''எக்ஸ்க்யூஸ்மி!'' என்று கேட்டுவிட்டு அந்த ஏ.சி.
அறைக்கதவு திறந்தது. யாரோ ஒரு வழுக்கைத் தலை
ஆசாமி கையில் பைலோடு காத்திட்டிருந்தார். ''பத்து
மணிக்கு நீங்க அசோசியேஷன் மீட்டிங்கில்



கலந்துக்கணும். பொருள் பிரிவில் ஒரு பொண்ணு
கையாடல் பண்ணிருச்சே, அதோட இறுதி
விசாரணையில் நீங்க இருக்க வேண்டியது அவசியம்.
அப்புறம் பதினோரு மணிக்கு...''
மராட்டி கலந்த இந்தியில் அவர் சொல்லிக் கொண்டே
போக, மனோகர் என்னைப் பார்த்து சிரித்தான்.
''பார்த்தீங்களா...? அஞ்சு நிமிடம் உங்களோட பேச
முடியலை. நிறைய நிகழ்ச்சிகள்! நான் கிளம்பறேன்...''
வழுக்கைத்தலை ஆசாமியோடு மனோகர் சென்று
விட, ஏ.சி. அறையை விட்டு நானும் வெளியே வந்தேன்.
பியூன் என்னை நோக்கி ஓடி வந்தான். இந்தியில்
கேட்டான்.
''நீங்க ஜெய்கிருஷ்ணனா?''
''ஆமாம்'' என்கிற மாதிரி தலையசைத்தேன்.
''உங்களுக்கு போன்.''
அவன் கூட்டிக் கொண்டு போய் ரசீவரை எடுத்துத்
தந்தான்.
''ஹலோ...''
''இச்...''
சுவர்ணா சிரித்தாள்.
''முத்தம் உனக்கு வேலை கிடைச்சதுக்காக!''
''எனக்கு வேலை எங்கே கிடைச்சிருக்கு... மாசமானா
சம்பளம் வாங்கிக்கச் சொல்லி ஒரு ஒப்பந்தப் பத்திரம்
கிடைச்சிருக்கு. அவ்வளவுதான். நான் எதிர்பார்க்காத ஒரு
ராஜ வாழ்க்கை. மனோகர் கூட காரில் போய் இறங்கின
பாவத்துக்கு எல்லாரும் எனக்கு சல்யூட் அடிக்கிறாங்க.''
''வாங்கிக்க.''
''நான் என்ன வேலை செய்யணும்னு எனக்கே
புரியலை.''
''மனோ சொல்லலை?''
''நீங்க பார்த்து செய்யறதுதான் வேலைன்னார்...''
''அப்புறம் என்ன சொன்னார்?''
'' 'நான் மீட்டிங்ல இருக்கும்போது சினிமா அங்கே
இங்கேன்னு சுவர்ணா கூப்பிட்டான்னா கம்பெனி
கொடுக்க நீங்கதான் போகணும்'ன்னு அப்பாவித்தனமா
சொல்றார்...''
''அது அவரோட இயலாமை.''

''சுவர்ணா! உன்னோட கணவர் ரொம்பவும் நல்லவரா தெரியறார். அவருக்கு நாம துரோகம் பண்ணணுமா?''

''இது துரோகமில்லை... ஜெய்! பரிகாரம். என்னை அவர் ஏமாத்தினதுக்கு என்னோட கோர்ட்ல அவருக்கு கொடுக்கப்பட்ட தண்டனை.''

''எனக்கு என்னமோ மாதிரி இருக்கு...''

''போகப் போக சரியாயிடும்.''




வேலைக்கு சேர்ந்து பதினைந்து நாள் ஓடியிருக்கும். ஆபீசில் இருந்த நேரங்களைக் காட்டிலும் - சுவர்ணாவோடு - ஷாப்பிங், சினிமா, மியூசிக் என்று போனதுதான் அதிகம். அப்படி அவளோடு போகும்போதெல்லாம் மனசுக்குள் ஒரு குறுகுறுப்பு. அடுத்தவன் வீட்டுப் பொருளைத் திருடுகின்ற உணர்ச்சி.

அன்று மாலை ஆறு மணி. மனோகர் கல்கத்தா புறப்பட்டு போயிருக்க - நான் ஆபீசில் ஷ்டோர் பிரிவில் பைல்களை சரிபார்த்துக் கொண்டிருந்தேன். டெலிபோன் கூப்பிட்டது. ரிசீவரை எடுத்தேன்.

''ஹலோ...''

''ஜெய்... நான்தான்.'' - சுவர்ணாவின் குரல்.

''சொல்லு... என்ன விஷயம்?''

''அவர் கல்கத்தா புறப்பட்டு போயிட்டாரா...?''

''இந்நேரம் ஆகாயத்தில் பறந்திட்டிருப்பார்...''

''சரி... ஆபீசுல உனக்கு வேலை முடிஞ்சுதா...?''

''இன்னும் இல்லை.''

''வேலை முடிய எவ்வளவு நேரமாகும்?''

''அரை மணி நேரமாகும்.''

''ஆறரை மணிக்கெல்லாம் ஆபீசை விட்டு வெளியே வந்துடுவே?''

''ஆமா...''

''நேரா நம்ம பங்களாவுக்கு வந்துடு...''

''எதுக்கு...?''

''எதுக்கா...? நான் சொன்னபடி உனக்கு ஒரு வேலையை வாங்கிக் கொடுத்திட்டேன். நீ சொன்னபடி



என்கிட்டே நடந்துக்க வேண்டாமா?''

''சுவர்ணா! நீ என்ன சொல்றே?''

''நீ எனக்கு வெறும் சினிமா துணை மட்டும் இல்லை. அதுக்கும் மேலே... உன்னோட பங்கை நான் எதிர்பார்க்கிறேன்.''

''சுவர்ணா! இதெல்லாம் போன்ல பேசணுமா?''

''தாராளமா போன்ல பேசலாம். அந்த ஆபீஸ்ல யாருக்குமே தமிழ் ஒரு வார்த்தைகூட தெரியாது.''

''சுவர்ணா! உன்னோட கணவருக்கு நீ வழங்கற தண்டனை அதிகம். இன்னும் ஒருபடி மேலே சொல்லப் போனா... ரொம்பவும் கொடூரம்.''

''என்ன ஜெய்... பேச்சோட போக்கே மாறுது...? எனக்கு நீ உபதேசம் பண்றியா...''

''நோ... நோ... இது உபதேசமில்லை... என்னோட மனசுக்கு தோணின ஒரு எண்ணம்...''

''சரி. நீ ஆறரை மணிக்கு மேல பங்களாவுக்கு வரப் போறியா இல்லையா?''

''வர்றேன். ஆனா... எட்டு மணிக்கெல்லாம் திரும்பிடுவேன்.''

''ஜெய்! என்னோட தாகம் உனக்குத் தெரியலையா?''

''தாகத்துக்காக விஷத்தண்ணீரைக் குடிக்கலாமா...?''

''சே! உனக்கு நன்றியே கிடையாது... நான் மட்டும் அன்றைக்கு உன்னைப் பார்த்துவிட்டு - மாருதி காரை நிறுத்தாமே போயிருந்தா... இந்த பம்பாய்ல இன்னமும் நீ பிச்சைக்காரன் மாதிரி அலைஞ்சிட்டிருப்பே... உன்னை வீட்டுக்கு கூட்டிட்டு வந்து - என்னோட கணவர்கிட்டே சொல்லி - உனக்கு வேலை வாங்கிக் கொடுத்தது என்னோட மடத்தனம். உனக்கு எப்படி வேலையை வாங்கிக் கொடுத்தேனா... அதே மாதிரி பறிக்கவும் என்னால முடியும்.''

நான் திடுக்கிட்டேன்.

''சுவர்ணா! அப்படியெல்லாம் பண்ணிடாதே! இந்த வேலை கிடைச்ச பின்னாடிதான்... நானும் என் குடும்பமும் சந்தோஷமா இருக்கோம். அந்த சந்தோஷத்தைக் கெடுத்துடாதே...''

''உனக்கு உன்னோட சந்தோஷம் எப்படி முக்கியமோ... அதே மாதிரிதான் எனக்கும் என்னோட

சந்தோஷம் முக்கியம். நான் இப்போ நம்ம தமிழ் நாட்டு சுவர்ணா இல்லை ஜெய்... நான் பாம்பே சுவர்ணா. என் வாழ்க்கையைப் பாலைவனமாக்கிய என் கணவருக்கு உன் மூலமாத்தான் நான் பாடம் கற்பிக்க நினைக்கிறேன்... இதுக்கு நீ உதவுவியா மாட்டியா?''

''உதவறேன்...''

''அப்படின்னா... உடனே பங்களாவுக்கு வா...''

''வேலைக்காரி...''

''மத்தியானமே அவளுக்கு லீவு கொடுத்து அனுப்பிட்டேன்.''

''சரி... வர்றேன்.''

''நன்றி... ஜெய்!'' அவள் குழந்தையாய் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும்போதே - நான் ரிசீவரை சாத்திவிட்டு - தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தேன்.

'சுவர்ணாவா இப்படி...!

கணவனைப் பழி வாங்குவதாக நினைத்துக் கொண்டு தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிறாளே...

இவளுக்கு எதைச் சொல்லி எப்படி புரிய வைப்பது?'

கனமான கவலையோடு யோசித்துக் கொண்டே - ஆறரை மணி வரைக்கும் ஆபீசில் இருந்துவிட்டு புறப்பட்டேன்.

பஸ் பிடித்து மலபார் ஹில்சில் இறங்கியபோது - இருட்டு அடர்த்தியாய் கவிந்திருந்தது. கமலா நேரு பார்க் ரோட்டில் நடந்து - சுவர்ணாவின் பங்களாவுக்குள் நுழைந்தேன். போர்டிகோவில் மாருதியும் ஸ்டாண்டர்ட் 2000 காரும் - எதிரெதிரே முத்தமிட்டுக் கொள்வதைப் போல் நின்றிருந்தன.

ஹாலுக்குள் நுழைந்தேன்.

மாடியில் டேப் ரிக்கார்டர் - சுவர்ணாவுக்கு பிடித்தமான 'புஸ்சிகேட்' பாடலை பாடிக் கொண்டிருந்தது.

மாடிப்படிகளில் ஏறினேன்.

மனசு பூராவும் உதறல்.

இப்படியொரு பாவத்தை செய்யத்தானா பம்பாய் வந்தேன்?

சுவர்ணாவுக்கு எந்த புத்திமதியைச் சொன்னாலும் -



ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமையில் அவள் இல்லை.

மாடிப் படிகள் முடிந்து போயிருக்க - வராந்தாவில் நடந்து - டேப் ரிக்கார்டர் இழைந்து கொண்டிருந்த - அறைக்குள் நுழைந்தேன்.

சுவர்ணா கட்டிலில் ஒயிலாக - ஒருக்களித்து படுத்திருந்தாள். நான் மெதுவாக நடந்து போய் அவளருகே நின்றேன்.

''சு...வர்...ணா...''

கட்டிலின் நுனியில் உட்கார்ந்து - அவளுடைய தோள் பட்டையைப் பிடித்து மெல்லத் திருப்பினேன்.

சுவர்ணா பிடிப்பில்லாமல் திரும்பினாள்.

நிலைத்த கண்கள்.

நெஞ்சில் ஒரு ரத்தக் குளம்.

சுவர்ணா செத்திருந்தாள்.




நான் நம்ப முடியாமல் சுவர்ணாவைப் பார்த்தேன். 'நான் செத்தது உண்மைதான்' என்று தீர்மானமாய் சொல்பவளைப் போல - ரத்தச் சகதியாய் - நிலைத்த விழிகளோடு மேற்கூரையை வெறித்தாள். என் உடம்பு பூராவும் பொடிப் பொடியாய் வியர்வை.

'என்ன செய்யலாம்?'

'போலீசுக்கு போன் செய்து விஷயத்தைச் சொல்லலாமா? இல்லை; வந்த சுவடு தெரியாமல் - வெளியே போய்விடலாமா...?'

மனசுக்குள் பட்டிமண்டபம் நடந்தது.

'இந்த பங்களாவுக்குள் நீ நுழைந்ததை யாராவது பார்த்திருக்கலாம். நாளைக்கு அந்த விஷயம் அம்பலமானால் - போலீஸ் பார்வையில் நீதான் குற்றவாளி. போன் செய்து தகவல் சொல்லிவிடுவதே புத்திசாலித்தனம்...'

'வேண்டாம். போன் செய்யாதே! போலீஸ் வந்தால் உன்னைக் கேள்விகளாலேயே அரைத்துத் தள்ளிவிடுவார்கள்.'

சில நிமிட யோசனைக்குப் பின்-டெலிபோனைத்

தொட்டேன். ரிசீவரை எடுத்து போலீசுக்கு டயல் செய்தேன்.

பத்தாவது நிமிடம்-

பங்களாவுக்குள் ஒரு போலீஸ் படையே இருந்தது. பாரன்சிக் ஆட்கள் மும்முரமாய் இயங்கிக் கொண்டிருக்க அந்த இளவயது சப்-இன்ஸ்பெக்டர் என்னைக் கேள்விகளால் கொத்திக் கொண்டிருந்தான். ஆங்கிலமும் கொச்சை. இந்தியும் கொச்சை.

''நீ எதுக்காக இங்கே வந்தே...?''

''மிஸஸ் சுவர்ணா வரச்சொல்லியிருந்தாங்க.''

''எதுக்கு...?''

''சும்மா பேசிட்டிருக்கத்தான். நானும் சுவர்ணாவும் காலேஜில் ஒண்ணா படிச்சோம்...''

''சுவர்ணாவின் கணவர் கல்கத்தாவுக்கு எப்போ போனார்?''

''அஞ்சு மணிக்கே அவர் ஏர்-போர்ட் போயிட்டார்.''

''இந்த பங்களாவுக்கு வாட்ச்மேன் கிடையாதா...?''

''இல்லை...''

''வேலையாட்கள்...?''

''எப்பவும் வேலைக்காரி ஒருத்தி இருப்பா... நான் இன்றைக்கு வந்தப்ப அவளும் பங்களாவில் இல்லை...''

''சுவர்ணா உனக்கு போன் பண்ணினதா சொன்னே?''

''ஆமா...''

''எத்தனை மணிக்கு போன் பண்ணினா?''

''ஆறு மணிக்கு...''

''நீ இந்த வீட்டுக்கு வந்தப்ப மணி எவ்வளவு?''

''ஏழு மணி.''

''ஒரு மணி நேரத்துக்குள்ளே இந்தக் கொலை நடந்திருக்கு...?''

''ஆமா... சார்...''

''மனோகர் என்ன நோக்கத்துக்காக கல்கத்தா போயிருக்கார்?''

''பிசினஸ்...''

''கல்கத்தாவில் அவர் எங்கே தங்குவார்...''

''ஓட்டல் பிரின்ஸ்.''

''வழக்கமா அங்கேதான் தங்குவாரா...?''

''என்கிட்டே அப்படித்தான் சொன்னார்...''



''மனோகர் - சுவர்ணா குடும்ப வாழ்க்கை சுமுகமா இருந்ததா?''

நான் பதில் சொல்லத் திணறினேன்.

''ஏன் மவுனமாயிட்டே?''

''சுமுகமாத்தான் இருந்தாங்க சார்...''

இன்ஸ்பெக்டர் - தன் அருகே வந்து நின்ற- சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரை ஏறிட்டார். மராட்டியில் கேட்டார். ''என்ன, ஏதாவது உபயோகமான தடயம், தகவல் கிடைச்சுதா?''

''இல்ல... சார்...''

''சுவர்ணாவோட கணவர் மனோகர் ஆறு மணி விமானத்தில் கல்கத்தா புறப்பட்டு போயிருக்கார். சாந்தாகுரூஸ் ஏர்-போர்ட்டுக்கு போன் பண்ணி- அவர் உண்மையிலேயே பிளைட்ல போயிருக்காரா இல்லையான்னு உறுதி பண்ணிக்கங்க ஜோஷி!''

''எஸ்... சார்...''

''பாடியை போஸ்ட்மார்ட்டம் அனுப்பிட்டு... இவர்கிட்டே ஒரு ரிப்போர்ட் எழுதி வாங்கிக்கிங்க.'' - இன்ஸ்பெக்டர் என்னைக் கைகாட்டிவிட்டு - பாரன்சிக் அதிகாரி ஒருவரை நோக்கிப் போனார்.




நான் அறைக்குத் திரும்பியபோது - ராத்திரி பதினோரு மணி. பிரபுராம் எனக்காக தூங்காமல் ஒரு தமிழ்நாவலை படித்துக் கொண்டு காத்திருந்தான். என்னைப் பார்த்ததும் சிரித்துக் கொண்டே கேட்டான்.

''இன்றைக்கு மகாராணியோடு எந்த ஏரியாவுக்கு திக் விஜயம் பண்ணினே?''

நான் 'பொத்'தென்று கட்டிலில் உட்கார்ந்து தலையைப் பிடித்துக்கொள்ள- பிரபுராம் முகம் மாறினான்.

''டேய்... ஜே.கே.! உனக்கு என்னாச்சு...?''

முகத்தை இரண்டு கைகளாலும் வழித்துக் கொண்டு நிமிர்ந்தேன். ''டேய் பிரபு! என்னோட விவகாரம் பெரிய விபரீதமாயிடுச்சுடா...''

''என்னடா சொல்றே?''

''சுவர்ணாவை யாரோ கொலை பண்ணிட்டாங்க.''

''எப்போ...?''

பிரபுவுக்கு - நான் விவரமாய் - எல்லாமே சொன்னேன். அவன் கேட்டுவிட்டு திகிலாய் என்னைப் பார்த்தான்.

''போலீஸ் உன் மேல சந்தேகப்பட்டாங்களா?''

''சந்தேகப்படலை... ஆனால், கேள்விகளைக் கேட்டு குதறிட்டாங்க. ஒரே கேள்வியை தினுசு தினுசா கேட்கிறாங்க...''

''மனோகர் கல்கத்தா போனது உண்மைதானா?''

''உண்மைதான். போலீஸ் ஏர்போட்டுக்கு போன் பண்ணி - அவர் பிரயாணம் பண்ணினதையும் - கல்கத்தாவில் இருக்கிற பிரின்ஸ் ஓட்டலுக்கு போன் பண்ணி - அவர் அங்கே தங்கியிருக்கிறதையும் உறுதி பண்ணிட்டாங்க.''

''மனோகருக்கு தகவல் சொல்லியாச்சா?''

''சொல்லியாச்சு. அவர் எந்த நிமிடமும் ஏதாவது ஒரு வாகனத்தைப் பிடிச்சு இங்கே பம்பாய் வந்து சேரலாம்.''

நான் சொல்லச் சொல்ல - பிரபுராமின் முகம் வியர்த்துப் போயிருந்தது. ''சுவர்ணாவைக் கொலை பண்ணினது மனோகர் இல்லைன்னா, வேற யாராக இருக்க முடியும்?''

''அதுதான் எனக்கும் புரியலை...''

''இந்த பணக்காரங்க கிட்டே ரொம்பவும் நெருங்கிப் பழகினாலே இப்படித்தான். சரி, நடந்ததையெல்லாம் ஒரு கெட்ட கனவா நினைச்சுட்டு வந்து படு. சாப்பிட்டியா?''

''ஊஹூம்.''

''ரொட்டி இருக்கு சாப்பிடறியா?''

''வேண்டாம். இரண்டு நாளைக்கு எனக்கு எதுவுமே இறங்காது.''

''அப்ப படுத்து தூங்கு.''

பிரபு ட்யூப்லைட்டை இருட்டுக்கு கொண்டுவர - நான் சக்கையாய் உலர்ந்து போன உடம்பைக் கட்டிலுக்கு கொடுத்தேன்.

மனசுக்குள் சந்தைக்கடை இரைச்சலாய் குழப்பங்கள். இதயத்தின் எல்லா சுவர்களிலும் - சுவர்ணா இறந்து கிடந்த கோலம் - பெரிய போஸ்டராய் ஒட்டப்பட்டு தெரிந்தது.

சுவர்ணாவைப் பிடிக்காத அந்த எதிரி யார்?

மனோகர் திரை மறைவில் இருந்து கொண்டு...



யாராவது ஒரு ஆள் மூலம்... சுவர்ணாவைத் தீர்த்துக் கட்டியிருப்பாரோ?

நான் தூங்காமல் எதிர்ப்புற சுவரையே இருட்டில் வெறித்துப் பார்த்தபடி படுத்திருந்தேன்.

மேல் போர்ஷனிலிருந்து சுவர்க்கடிகாரம் - அரைமணி நேரத்துக்கு ஒரு தடவை - அறிவித்துக் கொண்டிருந்தது.

நேரம் 1-30 ஆகியிருந்தபோது - மாடிப்படிகளில் யாரோ ஏறி வரும் சத்தம் கனமாய் கேட்டது.

நான் உன்னிப்பாய் அதைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே - சத்தம் என் அறைக்கு முன்பாக வந்து நின்றது. தொடர்ந்து கதவு தட்டப்படும் சத்தம்.

''டொக்... டொக்க...''

நான் 'சரக்'கென்று எழுந்து உட்கார்ந்தேன். பிரபுவும் தூக்கத்திலிருந்து எழுந்து உட்கார்ந்து போர்வையை உதறினான். இந்தியில் கேட்டான். ''யாரது?''

''போலீஸ்.''

வெளிப்பக்கமிருந்து குரல் வந்தது.

''மறுபடியும் உன்கிட்டே விசாரணைக்கு வந்துட்டாங்க போலிருக்கு-'' பிரபு பேசிக் கொண்டே போய் - கதவைத் திறந்தான்.

கதவைத் திறந்ததுமே - இன்ஸ்பெக்டர் இரண்டு கான்ஸ்டபிள்களோடு ஒரு சின்ன புயல் மாதிரி உள்ளே வந்து - என்னை மிகக் கிட்டத்தில் முறைத்தார்.

நான் நாக்குழறினேன்.

''எ... என்ன... சார்?''

''சுவர்ணாவைக் கொலை பண்ணினது நீதானே?''

''நோ. நானில்லை சார்.''

இன்ஸ்பெக்டர் என்னை பளீரென்று அறைந்தார். ''மரியாதையா உண்மையைச் சொல்லிடு. நீதான் சுவர்ணாவைக் கொலை பண்ணியிருக்கே என்கிறதுக்கு கைவசம் ஆதாரங்கள் கிடைச்சிருக்கு...''

நான் பொறி கலங்கிப் போனேன்.

''ஆதாரங்களா...? என்ன ஆதாரங்கள்?''

''ஸ்டேஷனுக்கு வா, சொல்றேன்-'' என் கழுத்தில் கையை வைத்து பக்கத்து கான்ஸ்டபிளிடம் தள்ளினார்.

''இவனை ஜீப்புக்கு கூட்டிட்டு போ.''

அவிழ்ந்த லுங்கியைக் கூட சரியாக கட்டிக்கொள்ள

அவகாசம் தராமல்- அந்த கான்ஸ்டபிள் என்னை இழுத்துக் கொண்டு போனான்.

போலீஸ் லாக்கப்பில் - விடிய விடிய மோசமாய் அடிபட்டேன். இரத்தம் அங்கங்கே உடம்பில் கட்டி உடம்பை அசைக்கும்போது - மரண வலி. மூக்கின் இரண்டு துவாரங்களிலும் இரத்தம்கட்டியாய் உறைந்து உறைந்து போய்- சுவாசிக்கும்போது உறுத்தியது. கடைவாயில் பிசு பிசுப்பாய் இரத்தம். ஒரு நாள்பூராவும் லாக்கப்பில் இருந்தேன்.




மறுநாள்- மாதுங்காவிலிருந்து தமிழ் தெரிந்த ஒரு இன்ஸ்பெக்டரைக் கூட்டி வந்து என்னிடம் விசாரணை நடத்தினார்கள். அவர் பம்பாய் போலீசைக் காட்டிலும் மிக மோசமாய் என்னை அடித்தார். கெட்ட வார்த்தைகளை தாராளமாய் உபயோகப்படுத்தினார்.

''ஊர் விட்டு ஊர் வந்து ஏன்டா தமிழ் நாட்டு மானத்தையே வாங்கறீங்க? அந்த பணக்கார பொண்ணை எதுக்காக கொலை செஞ்சே?''

''நா... நான் கொலை பண்ணலை சார்...''

''சரி. உனக்கும் சுவர்ணாவுக்கும் நடுவுல எந்த மாதிரியான உறவு இருந்தது?''

''தப்பான உறவு ஒண்ணுமில்ல சார். நாங்க நண்பர்கள். அவ்வளவுதான்.''

''என்னை நம்பச் சொல்றியா? நீதான் கொலை பண்ணியிருக்கணும் என்கிறதுக்கு போலீஸ் கிட்டே ஆதாரம் இருக்கு. சுவர்ணா கொலை செய்யப்படறதுக்கு ஒரு மணி நேரத்துக்கு முந்தி - அவள் உனக்கு போன் பண்ணியிருக்கா. இல்லையா?''

''ஆமா.''

''அந்த டெலிபோன் உரையாட்லில் உனக்கும் அவளுக்கும் ஒரு வாக்குவாதமே நடந்திருக்கு..''

''வா... வாக்குவாதமா?.''

''ஆமா. நீ வேலை பார்க்கிற கம்பெனி டெலிபோன் ஆபரேட்டரோட சாட்சியம் இது. டெலிபோன் ஆபரேட்டருக்கு தமிழ் மொழி புரியாமே போனாலும்



உனக்கும் சுவர்ணாவுக்கும் நடுவுல ஏதோ வாக்குவாதம் நடந்ததா போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கார்.''

நான் இடிந்துபோய் இன்ஸ்பெக்டரைப் பார்த்தேன்.

''என்னடா பார்க்கிறே? மரியாதையா உண்மையை ஒத்துக்க. பம்பாய் போலீசைப் பற்றி உனக்குத் தெரியாது. பார்க்கிற வரைக்கும் பார்ப்பாங்க. அப்புறம் உன்கிட்டேயிருந்து உண்மையை வரவழைக்கிறதுக்காக- சிலமோசமான - கொடூரமான சிகிச்சைகளைப் பண்ண ஆரம்பிச்சுடுவாங்க. கொறடு வைச்சு ஒவ்வொரு நகத்தையும் வேரோடு பிடுங்கும்போது எப்படியிருக்கும் தெரியுமா?''

என் உடம்புக்குள் குளிர் பிடித்துக் கொண்டது. கண்களில் 'குபுக்'கிட்ட கண்ணீரோடு - அந்த இன்ஸ்பெக்டரை ஏறிட்டேன்.

''சா... சார்... அம்மா மேல சத்தியமா நான் அந்த கொலையைப் பண்ணலை சார்...''

அவர்காலில் விழப்போன என்னை - தலைமுடியைப் பிடித்து நிறுத்தினார். ''ஏன்டா! உங்கம்மா மேல சத்தியம் பண்ணினால் போலீஸ் நம்பிடணும்னு இந்திய பீனல்கோட் சட்டத்துல எழுதியிருக்கா?''

''ச... சார்...''

''இதோ பார்... உனக்கும் அந்தப் பொண்ணு சுவர்ணாவுக்கும் டெலிபோன்ல ஏதோ வாக்குவாதம் நடந்திருக்கு! அந்த வாக்குவாதம் எதுக்காக?''

நான் தீர்மானத்துக்கு வந்தேன். 'உண்மையைச் சொல்லிவிட வேண்டியதுதான். இல்லாவிட்டால், போலீசின் சந்தேகம் வேறு திசையில் பயணம் செய்து என்னைக் கொலைகாரனாக்கி விடும்.'

''என்னடா யோசனை?''

''உண்மையைச் சொல்லிடறேன் சார்.''

''சொல்லு.''

சொன்னேன். எனக்கும் சுவர்ணாவுக்கும் ஊரில் இருந்தபோது ஏற்பட்டிருந்த பழக்கம், பம்பாய் வந்தபோது அவளைப் பார்த்தது, அவள் மனோகரைப் பற்றி சொன்னது, சுவர்ணா என்னிடமிருந்து எதிர்பார்த்த உறவு - எல்லாவற்றையும் சொன்னேன்.

இன்ஸ்பெக்டர் ஒரு சிகரெட்டை புகையாக்கிக்

கொண்டே - எல்லாவற்றையும் கேட்டுவிட்டு நிமிர்ந்தார்.

''கணவனைப் பழி வாங்கறதுக்காக உன் கூடப் பழகினாளா?''

''ஆமா சார்.''

''அதுக்காக அவளோட கணவன் கம்பெனியிலேயே உனக்கு ஒரு வேலையும் வாங்கி கொடுத்திருக்கா...?''

''ஆமா சார்.''

''நீ அவளைத் தொட மாட்டேன்னு சொன்னதுக்காகத்தான் டெலிபோன்ல சத்தம் போட்டாளா?''

''ஆமா சார்.''

''இந்த உண்மையெல்லாம் மனோகருக்குத் தெரியுமா?''

''தெரியாது சார்.''

''அவருக்கு தெரியாதுன்னு உனக்கு எப்படி தெரியும்?''

''தெரிஞ்சிருந்தா அவர் எனக்கு வேலை போட்டுக் கொடுத்திருக்க மாட்டாரே சார்?'' நான் சொல்லிக் கொண்டிருக்கும்போதே தாட்டியான அந்த கான்ஸ்டபிள் வந்து இன்ஸ்பெக்டரிடம் ஏதோ சொன்னான்.

அவர் ''அப்படியா?'' என்று இந்தியில் ஆச்சரியப்பட்டுக் கொண்டு - கான்ஸ்டபிளோடு வெளியே போனார். சில நிமிடங்களுக்குப் பின் - மறுபடியும் உள்ளே வந்தார். ''உனக்கு அதிர்ஷ்டமிருக்கு!'' என்று என்னைப் பார்த்து புன்னகைத்தார்.

''சார்...''

''கொலையாளி மாட்டிகிட்டான்.''

''யா... யா... யார்... சார்?''

''பாவன்ஜி...''

''பாவன்ஜி...?''

''ம்... சுவர்ணா வீட்டு கார் டிரைவர். 'ஊர்ல கல்யாணம். ஒரு வாரம் லீவு வேணும்'னு வாங்கிட்டு போனவன் - இரண்டு நாள்ல ஊருக்கு திரும்பி வந்து - யாருக்கும் தெரியாமல் வீட்டை சூறையாட திட்டம் போட்டிருக்கான். நேத்து சாய்ந்தரம் வீட்ல தனியா இருந்த



சுவர்ணாவைக் கத்தியால குத்தி கொலை பண்ணிட்டு - இரும்பு பீரோவைத் திறந்து - நகை - பணத்தைக் கொள்ளையடிக்க முயற்சி பண்ணின நேரம் - நீ பங்களாவுக்கு போயிருக்கே. பாவன்ஜி பயந்துபோய் பின்பக்க வழியா ஓடியிருக்கான். போலீஸ் நாய் டாபர்மேனை விடிய விடிய மோப்பம் பிடிக்க விட்டதில் - ஒரு டீக்கடையில் உட்கார்ந்து டீயை உறிஞ்சிகிட்டிருந்த பாவன்ஜி வசமா மாட்டிகிட்டான்.''

எனக்கு சந்தோஷத்தில் கண்ணீர் வந்தது.

''சார்... இனிமே என்னை விட்டுருவீங்களா?''

''குற்றம் செய்யாதவங்களுக்கு போலீஸ் ஸ்டேஷன்ல இடமே கிடையாது. நீ போயிட்டே இருக்கலாம்.''

நான் கைகளைக் குவித்துவிட்டு வெளியே வந்தேன்.




**போ**லீஸ் ஸ்டேஷனிலிருந்து - நான் பிரபுராமின் அறைக்குப் போய் சேர்ந்தபோது காலை எட்டு மணி. பிரபுராம் வேலைக்கு புறப்பட்டுப் போகத் தயாராக இருந்தான். என்னைப் பார்த்ததும் அவன் முகத்தில் ஒரு சின்ன சிரிப்பு கூட இல்லை. நான் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும்போதே - அவன் இறுகின முகத்தோடு கேட்டான்.

''உனக்கு யார் ஜாமீன் கொடுத்தாங்க?''

''நான் ஜாமீன்ல வரலை.''

''பின்னே?''

''என்னை விடுதலை பண்ணிட்டாங்க.''

''எப்படி?''

''கொலையாளி கிடைச்சுட்டான். சுவர்ணாவோட வீட்டு கார் டிரைவர் பாவன்ஜிதான் நகைகளையும் பணத்தையும் கொள்ளையடிக்கிறதுக்காக... சுவர்ணாவைக் குத்தி கொன்னிருக்கான். போலீஸ் நாய் அவனை மோப்பம் பிடிச்சு...''

பேசிக்கொண்டே போன நான் - பிரபுராமின் முகத்தில் சந்தோஷம் தொனிக்காததைப் பார்த்து - பேச்சை நிறுத்தினேன்.

''பிரபுராம்...''

''... ...''

''ஏன்டா ஒரு மாதிரி இருக்கே?''

பிரபுராம் ஒன்றும் பேசாமல் நடந்து போய், மேசையின்மேலிருந்த ஒரு இந்தி நாளிதழையும், ஆங்கில நாளிதழையும் கொண்டு வந்து என் கையில் திணித்தான்.

''என்னடா?''

''ரெண்டு பத்திரிகைகளோட முதல் பக்கங்களையும் பாரு...''

பிரித்துப் பார்த்தேன்.

என் போட்டோவையும், சுவர்ணாவின் போட்டோவையும் காபினெட் சைசில் போட்டு - கொட்டை எழுத்தக்களில் செய்தி ஓடியிருந்தது. ஆங்கில பத்திரிகையில் நான்தான் கொலையாளி என்கிற தீர்மானத்தோடு செய்தி பிரசுமராகியிருந்தது.

நான் பிரபுராமைப் பார்க்க - அவன் எங்கோ பார்த்துக் கொண்டு சொன்னான் - ''இந்த இரண்டு பத்திரிகையில் மட்டுமல்ல - ஜே.கே.! பம்பாயிலிருந்து வர்ற எல்லா பத்திரிகைகளிலுமே உன்னோட போட்டோதான். இந்த ஏரியாவில் இருக்கிற எல்லாருமே என்மேலே மதிப்பும் மரியாதையுமா இருந்தவங்க. ஆனால், இன்றைக்கு... என்னைப் பார்த்தாலே எல்லாரும் ஒதுங்கிப் போறாங்க. உன்னால எனக்கு கெட்ட பேர்...''

எனக்குப் புரிந்தது.

'இந்த அறையில் இனிமேல் உனக்கு இடமில்லை. வேற எங்கேயாவது போய்த் தொலை' என்று சொல்லாமல் சொல்கிறான்.

நான் அவன் தோளைத் தட்டினேன்.

''கவலைப்படாதே பிரபுராம்! உன்னோட விருப்பத்துக்கு மாறாக இந்த ரூம்ல நான் தங்கிக்க மாட்டேன். இந்த ரூமை மட்டுமல்ல; இந்த பம்பாயை விட்டே நான் போகிறேன். சுவர்ணாவோட கணவன் மனோகர் கம்பெனியில் வேலை பார்க்க என் மனசாட்சி இடம் தரலை. மனோகரைப் பார்க்கும் போதெல்லாம். எனக்கு சுவர்ணாவோட ஞாபகம் வரும். மனோகருக்கும் அது ஒரு தர்மசங்கடமான நிலைமை. நான் என் சொந்த ஊருக்கே போகிறேன். இத்தனை நாளும், எனக்கு ரூம்ல இடம் கொடுத்து - என் சிரமங்களில் பங்கெடுத்துக்



கொண்ட உனக்கு என்னோட நன்றி.''

நான் டிரங் பெட்டியை எடுத்து வைத்துக் கொண்டு துணிகளை மடித்து வேகமாய் அடுக்கினேன்.

பிரபுராம் மவுனமாய் என்னையே பார்த்துக் கொண்டிருக்க - நான் அவனுடைய கையைப் பற்றி, வலிய குலுக்கிவிட்டு மாடிப்படிகளில் இறங்க ஆரம்பித்தேன்.




பம்பாய் விக்டோரியா டெர்மினஸிலிருந்து - பதினோராவது பிளாட்பாரத்தை விட்டு ஜெயந்தி ஜனதா எக்ஸ்பிரஸ் எனது ஊரை நோக்கி புறப்பட்டது.

நான் சன்னலோர சீட்டில் உட்கார்ந்திருந்தேன். ஒரு மாத காலமாய் பம்பாயில் இருந்ததில் - அந்த ஊரோடு ஒரு பரிச்சயம் ஏற்பட்டிருக்க - ஊரைவிட்டு பிரியும்போது மனசு வலித்தது. சுவர்ணாவோடு - சினிமா, கடற்கரை, ஸ்டார் ஓட்டல் என்று அலைந்தது மனதில் நிழலாடியது. ரெயில் சன்னலுக்கு வெளியே-

பம்பாயின் கட்டிடங்கள் பின்னோக்கி போய்க்கொண்டிருக்க - எனக்கு அம்மாவின் இருமலும் கவுசல்யாவின் கல்யாணக் கடனும் ஞாபகத்துக்கு வந்தது.

பெரிய வேலையொன்றில் நான் இருப்பதாக நினைத்துக் கொண்டு- அம்மாவும் கவுசல்யாவும் எக்கச்சக்கமான கற்பனைகளில் மிதந்து கொண்டிருப்பார்கள். இன்னும் முப்பத்தேழு மணி நேரத்தில் - அவர்களுடைய கற்பனைகளை நாசம் செய்து கொண்டு - ஒரு பிரமாண்டமான ஏமாற்றமாக - அவர்கள் முன்னால் போய் நிற்கப் போகிறேன்.

அம்மா இடிந்து போய்விடுவாள்.

கவுசல்யாவின் கனவு மாளிகை மறுபடியும் ஒரு தடவை இடியும்.

இத்தனைக்கும் நான் எந்த தப்பும் செய்யவில்லையே! யாருக்கும் எந்த துரோகமும் பண்ணலையே...!

என் அன்பான வாசகரே! வாசகியே!

உங்களுக்காவது என் நல்ல மனம் புரிகிறதா? நான்

நல்லவன்னு நீங்க நினைச்சா, எனக்காக ஒரு வேலை வாங்கிக் கொடுக்க முயற்சி பண்ணுங்க சார். எங்கேயாவது வேலை காலியிருந்தா எனக்கு தகவல் கொடுங்க சார்.

'முகவரி...?'

நம்பர் முப்பத்திரண்டு, அழகேசன் ரோடு, தீபா காலனிதான்... என்னோட வீட்டு முகவரி. வீட்டில் இல்லாத நேரங்களில், தெரு முனையில் ஒரு காபி பார் இருக்கும். அங்கே உட்கார்ந்திட்டிருப்பேன். தயவு பண்ணி தகவல் கொடுங்க சார்... அது எந்த வேலையாக இருந்தாலும் பரவாயில்லை; ஆனால், நாணயமான வேலையாக இருக்கணும்...!

முற்றும்